பாம்பன் சுவாமிகள்

PAMBAN SWAMIGAL

ஆன்மீக மாத இதழ்

வருகை -13 ஜூலை - 2017, ஹேவிளம்பி ஆனி-ஆடி மொழி - 5 விலை.ரூ.10



1

பாம்பனார் மைபந்தமிழரசு புகழ் வாழ்க!

ஸ்ரீலஸ்ரீ கருமாரிதாசருக்கு அஞ்சலி!

17/6/2017 அன்று சென்னை தேவர் மண்டபத்தில் மாலை 6 மணியளவில் ஆன்றோர் சான்றோர்கள் சேர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது.

பாம்பன சுவாமிகள்

வருகை -13 ஜூலை 2017 ஹேவிளம்பி ஆனி-ஆடி மொழி -5

உ

ஓம் குமர குருதாச குருப்யோ நம:

முதன்மை ஆலோசகர் பாம்பனார் பைந்தமிழரசு

நமது பாம்பன் சுவாமிகள் மாத இதழ் முதன்மை ஆலோசகர் பாம்பனார் பைந்தமிழரசு ஸ்ரீலஸ்ரீ தேவி கருமாரிதாசர் 5/6/2017 அன்று திடீரென பாம்பன் சுவாமிகள் திருவடி அடைந்தார்.

பாம்பன் சுவாமிகள் சீடராய், மூத்த மஹாதேஜோ மண்டலத்தராய், பிள்ளைத்தமிழ் பெரும்புலியாய், தம்பிக்கலை ஐயன் நாகேஸ்வரி உபாசகராய், சிறந்த ஜோதிடராய், பல ஆலயங்கள் அமைவதற்கு வழிகாட்டியாய், திருத்தல வரலாறுகளை திறம்பட தந்த ஞானியாய், தமிழன் அறிவியல் முன்னோடி என்பதற்கான ஆதாரம் அளித்த அற்புதமாய், ஏராளமான குடும்பங்களுக்கு வழிகாட்டியாய் விடுதலை போராட்ட வீரராய், மகாபாரத கம்பராமாயண விரிவுரையாளராய், இருந்த எங்களின் அன்புத்தந்தை.

ஸ்ரீலஸ்ரீ கருமாரிதாசர் எனும் வீரபத்திர கவிஞர் 5/6/2017 அன்று இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவனடி சேர்ந்தார்கள். அவர் தந்த வழியில் சைவமும் - தமிழும் இருகண்களாய், பாம்பன் சுவாமிகள் பாடல்களை மூச்சாக கொண்டு வாழ உறுதி ஏற்போம்.

-வீ.கலைச்செல்வன்

பாம்பனார் பைந்தமிழரசு ஸ்ரீலஸ்ரீ தேவி கருமாரிதாசர்



பாம்பனார் பைந்தமிழரசு ஸ்ரீலஸ்ரீ தேவி கருமாரிதாசர் சுவாமிகள் 05-06-2017 திங்கள்கிழமை ஹேவிளம்பி வைகாசி 22 சுக்ல ஏகாதசி திதி சித்ரா நட்சத்திரம் கூடிய நாளில் காலை 9.25 மணிக்கு நமது குருநாதர், குகன் திருவடியை அடைந்தார். ஈரோடு மரப்பாலம் கோமதி பிரஸ் வளாகத்தில் (101,மண்டபம் வீதி) அவரது பூத உடல் பொதுமக்கள் அஞ்சலி செய்ய வைக்கப்பட்டது. கண்ணீர்க் கடலில் மூழ்கிய பக்தர்கள் அவருடைய திருவடிக்கு வில்வம், துளசி மலர் மாலைகள் குவித்து வணங்கிச் சென்றனர். திருவாசகம் சிவபுராணம் படிக்கப்பட்டது. ஷண்முக கவசம் ஓதப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் காற்றோடு காற்றாக காலத்தோடு காலமாக குக சாயுச்சிய நிலை அடைந்த செய்தி அறிந்த அவரது அன்புக்குரிய அடியார்கள் செய்வதறியாது திகைத்துப்போய் வரிசை வரிசையாக வந்து அஞ்சலி செய்தனர்.

அருள்மிகு தம்பிக் கலை ஐயன் திருக்கோயில் நிர்வாகதாரர்கள் அலுவலர்கள் - செயல் அலுவலர் மற்றும் ஸ்ரீசுவாமிகளை காஞ்சிக் கோயில் தம்பிக்கலை ஐயன் ஆலயத்திற்கு அழைத்து வந்த கொங்குமாமணி AC நல்ல கோவிந்தசாமி அவர்கள், அருள்மிகு சோழீஸ்வரர் ஆலயத்தைச் சார்ந்த அன்பர்கள் - சிவாச்சாரியர்கள். தென்கயிலை திருமூர்த்திமலை குருமகான் மகாமகரிஷி பரஞ்சோதியாரின் மெய்ஞான ஆசிரியர்கள் உலகசமாதான ஆலய அன்பர்கள், பல்லாண்டு காலம் அவரைத் தங்கவைத்து ஆதரித்த கோமதி பிரஸ் உரிமையாளர், சென்னையில் இருந்து அவருடைய திருக்குமாரர்கள் பாம்பனார் இசை அரசு சத்குரு ஆன்மீகச் சுடர் குகஸ்ரீ கலைச்செல்வன், சாந்தி அவரின் கணவர் திரு.ஞானசேகர் ராமதாஸ் மற்றும் உறவின் முறையினர் பேரப்பிள்ளைகள் இரவே வருகை தந்து அவருக்கு அஞ்சலி செலுத்தினர். ஆன்மீக ஆலயம் மாத இதழ் ஆசிரியர், பூபதி, கணபதிஸ்தபதியாரின் வளர்ப்பு மகள் அஞ்சலி செலுத்தினர்.

6.6.2017 செவ்வாய்கிழமை காலை 7 மணி முதல் புனித நதி தீர்த்தங்களால் அவருக்கு அபிஷேகம் செய்யப்பட்டு 8 - 9 மணிக்கு அவருடைய பூத உடல் ஊர்வலமாக அருள்மிகு தம்பிக்கலை ஐயன் திருக்கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு - ஓலைச் சுவடிகளில் இருந்து ஸ்ரீ சுவாமிகள் கண்டுபிடித்துக்கொடுத்த ஞானமூல வெளி சிவகங்கைத் தீர்த்தக் குளக்கரைக்கு அருகில் மஹா சமாதி செய்யப்பட்டு. விபூதியால் நிறைத்து திருநீற்றுச் சித்தருக்கு விடைகொடுத்தனர். அன்று வானம் அழுதது. பெரும் மழையாகக் கொட்டித் தீர்த்தது. தொடர்ந்து நடந்த இரங்கல் கூட்டத்திற்கு பின் விடைபெற்றனர்.

ஓடி ஓடி உழைத்த கால்களை ஓய்வு எடுத்துக் கொண்டது
பாடிப் பாடி திருப்புகழ் ஓதிய நா- சுருண்டுவிட்டது
தேடித் தேடிப் பார்க்கினும் கிடைக்காத தத்துவங்களை
தேடிவந்து அருளிய சித்தர் அமைதி கொண்டார்

இனி நாடி நாடிச் சென்றாலும் அவர் போல் ஒரு நல்ல குருவை அடைய முடியுமா? அவர் அருளிய பாடல்கள் சித்தாந்தங்கள் - காட்டிய வழியில் நடந்து நன்மை பெறுவோம். நம்முடனே அவர் - ஆத்மா - ஆத்ம சக்தியால் நமது இடர் நீக்குவார் அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்தி வணங்குவோம், கண்ணீருடன் குருநாதர் பாதம் பணியும்.



குகச் சிவமணி
புலவர்.
இரா.சண்முகம்

பாம்பனார் பைந்தமிழரசு திருநீற்றுசித்தர் கருமாரிதாசர்

திருவருள் மொழிகள்!

உள்ளம் என்ற கோயிலில் ஒளி வீசும் இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்தால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும்.

தன்னைத்தான் அறிகிறபோது உலகம் நம்மை கண்டுகொள்ளும்.

தளராத முயற்சியால் எதையும் சாதிக்க முடியும்.

மற்றவர் குறையைத் காண்பதற்கு முன் நம்மிடத்திலுள்ள குறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

எவ்வகைப்பட்ட சூழலிலும் சினத்தைத் தவிர்த்தல் நல்லது.

அருளகம் என்பது எல்லா உயிர்களையும் நேசிப்பதாகும்.

பகைவர்களை மன்னிப்பது திருவரமாகும்.

காலம் நமக்குத் துணை புரியும் என்ற நம்பிக்கையில் காலத்தைக் கணித்துச் செயல்பட வேண்டும்.

நம் வாழ்க்கை குறிக்கோளுடன் செயல்படுமானால் துன்பங்கள் இன்பமாய் மாறிவிடும்.

ஆண்டவனிடத்தில் முழு மனதுடன் அன்பு செலுத்துதல் அருளைப்பெற வைக்கும்.

நிகழ்காலத்தில் எதிர்காலத்திற்கு வேண்டிய திட்டங்களை இடைவிடாமல் செய்ய வேண்டும். கடந்த காலம் நன்மைக்கே என்ற எண்ணம் வேண்டும்.



உலகம் நம்மிடத்திலுள்ள குறைபாடுகளையே நோக்கி கொண்டிருக்கும். அதனால் நம் குறைகளை நீக்கி கொள்ளுதலும் குறைகள் நேராவண்ணம் இருத்தலும் மேன்மை தரும்.

உடல்பிணி, உள்ளப்பிணி இவைகளை நீக்குவது முழு முதற்பரம்பொருளை முழுமையாக துதிப்பதாகும்.

அருளும் பொருளும் தெளிந்த மதியோர்க்கே கிட்டும்.

மனிதப் பிறவி புகழ் ஒன்றினாலேயே சிறப்பு பெறும்.

கலை கற்பதற்கும், ஞானம் உணர்வதற்கும் காலங்கருதாது உழைத்தால் நம் எண்ணத்தை ஈடேற்றும்.

உழைப்பும் உயர்வும் நமது இருகண்கள் என்று நினைப்போருக்கு உடல்நலம் ஓங்கும்.

தன்னிடத்தில் பொதிந்திருக்கும் - அபூர்வ சக்திகளை அறிபவனே மனிதப் பிறவியின் பயனை உணர்கிறான். உயர்வு அடைகிறான்.

உள்ளம், உயிர், உணர்வு என்ற மூன்றும் கண்ணுக்குத் தெரியாதவை - கருத்துக்கு விளங்குபவை - நம்உடலில் இருந்து அவையே ஆட்சி புரிகின்றன.

உண்மையும் உழைப்பும், உணர்வு, இடைவிடா முயற்சியும் கொண்டவனிடத்தில் இறையருள் ஒளிவீசுகிறது.

ஒன்றே இறைவன்! உயிரினம் ஒன்றே என்று கருதும் இயல்பே மனிதப் பிறவியின் அடிப்படைப் பண்பு.

மனிதப் பிறவியின் சிறப்பை உணர்ந்து கடைப்பிடித்தால் மாமனிதனாக விளங்க முடியும்.

மனமே எவைக்கும் மூலகாரணம்!

தன்னுள் இறைவன் இருக்கிறான் என்று நம்பி, தன்னுள் இறைவனைக் காண்பதே பேராற்றல் - பெருந்தவமும் ஆகும்.

உலகமெல்லாம் இன்பமுற்று வாழ வேண்டும் என்று ஒவ்வொரு தனிமனிதனின் துதி அல்லது பிரார்த்தனை தேவை.

சினத்தைத் தவிர்த்தல் - சிந்தனையைத் தூய்மைப் படுத்தும்.

திருநீற்று நெறி உயிர்களை எளிதில் உய்விக்கவல்லது.

சிவமே, சிவமே சிவமே என்று எப்போதும் சிந்தித்தலே தவம் ஆகும்.

காலங்கடந்த கடவுளைத் துதிப்பதற்குக் காலங்கருதத் தேவையில்லை.

அன்பு பெருகிய உள்ளத்துடன் நினைத்தலே இறைவழிபாடு. அதுவே யோகம், தவம், பக்தி, தியானம் ஞானமுமாகும்.

இறைவனின் நாமத்தைப் போற்றுதல், இடைவிடாது துதித்து வணங்குதலே நமக்கு பெருந்துணை புரியும்.

தெய்வ சிந்தனை உள்ளவர்களுக்கு அச்சம் தேவையில்லை. நமது உள்ளத்தில் இறைவன் வீற்றிருக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்தால் நாம் செய்யும் செயல்களில் முழு வெற்றிதான்.

எங்கும் நிறைந்த இறைவனை நம் மனத்தினால் எளிதில் காணலாம்.

பல வகையான கடினமான தவம் செய்து கிடைப்பதற்கு அரிய தெய்வம் நம் அன்புக்கு இரங்கி நம் உள்ளத்தைக் கோயிலாக்கிக் குடிகொள்கிறது.

பக்தி மார்க்கம் ஒன்றே பரம்பொருளை அடைய சிறந்த வழியாகும்.

பணிவும் அடக்கமும் பெரியோர் மொழிகளைக் கேட்டு மதித்தலுமே உயர்வுக்கு வழியாகும்.

பத்தி வலையில் படுவோன் காண்க.

அன்பின் வழியது உயர்நிலை அன்பினால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை.

எங்கே போகிறோம்?

கடந்த 1985-ம் வருடத்திற்கு பிறகு மனிதனின் நாகரீக வளர்ச்சி, கலாச்சாரம், பண்பாடுகளின் சீரழிவு மிக வேகமான வளர்ச்சியாக இருக்கிறது. அன்பு, கருணை, ஒழுக்கம், ஒற்றுமை என்பதெல்லாம் துளியும் இல்லை. ஏட்டுச்சுரக்காய் கூட்டிற்கு உதவாது என்ற பழமொழிக்கு ஏற்ப இன்றைய கல்வி நிகழ்கால, எதிர்கால இளைய சமுதாயத்திற்கு உதவக் கூடியதாக இல்லை.

எது எதிலோ வளர்ச்சி எப்படி வளர்ச்சி, பங்குசந்தை வளர்ச்சி என்று பைத்தியம் பிடித்தது போல் அலைந்து கொண்டிருக்கிறோம். விவசாய வளர்ச்சி வீழ்ச்சியடைந்துவிட்டது. காரணம், அறிவு வளர்ச்சி மழுங்கிவிட்டது. இவ்வளவு வளர்ச்சி பெற்றுவிட்டோம் என்று சொல்கிறோம். எந்தக் குடும்பத்திலாவது மகிழ்ச்சியில் வளர்ச்சி அடைந்துவிட்டோம் என்று சொல்ல முடிகிறதா? ஆரோக்கிய வாழ்க்கையில் மகிழ்ச்சியடைந்துவிட்டோம் என்று சொல்லமுடிகிறதா? ஒற்றுமையில் வளர்ச்சியடைந்துவிட்டோம் என்று சொல்ல முடிகிறதா? கண்டுபிடிப்புகளால் மகிழ்ச்சியடைந்து விட்டோம் என்று சொல்ல முடிகிறதா? நாம் ஒவ்வொருவரும் படித்த கல்விக்கும், பார்க்கும் வேலைக்கும் தொடர்பு இருக்கிறதா? என்றால் அதுவும் இல்லை. ஒருத்தர் சொல்கிறார், என் பெண் திருமணத்திற்கு 80 பவுன் போட்டேன், இன்னொருத்தர் சொல்கிறார், நான் எனது பெண்ணுக்கு 100 பவுன் போட்டேன் என்று கூறுகிறார்.

மாப்பிள்ளை வீட்டில் சொல்கிறார்கள், நான் ஒரு ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டில் பெண் எடுத்தேன் என்கிறார். மற்றொருவர் சொல்கிறார், நான் ஒரு மிகப்பெரிய தொழிலதிபர் வீட்டில் பெண் எடுத்தேன் என்றெல்லாம் கூறுகிறார்கள். அன்பு, கருணை, ஒழுக்கம், பணிவு தூய்மை, வாய்மை எல்லாம் உதட்டளவிலேயே இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணம், அடிப்படை கல்வி சரியாக இருக்க வேண்டும் இங்கே அடிப்படை கல்வி சரியாக இருக்கிறதா?

உலகிற்கு அணுவையும், அணுவின் செயல்பாட்டையும் முதன் முதலில் அறிவித்தவர்கள், கண்டுபிடித்தவர்கள் தமிழர்கள் அவர்கள் உலகின் முன்னோர்கள், அதில் மிக முக்கியத்துவம் பெற்றவர் திருமூலர், திருமந்திரம்.

அணுவில் அணுவினை ஆகிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே

பொருள்: (சிவப் பரம்பொருளை), அணுவுக்குள் அணுவான பரமாணுவை, ஆயிரம் துண்டாக்கி, அதில் ஒரு துண்டுக்குள் மிக நுண்ணியதாக உள்ள பரமாணுவான ஆதிப் பிரானை நெருங்கக் கூடியவர்களுக்கு அணுவுக்குள் அணுவான பரம்பொருளை அடைதலும் கைகூடும். (தி.ம.2008)

இவ்வாறு நமது மூதாதையர்கள் நமக்கு வழங்கிய கல்வியை (வாழ்க்கைக் கல்வி) நாம் தொடருகிறோமா? தொலைத்துவிட்டோம்! எதற்கெடுத்தாலும் மேலை நாட்டு மோகம் ஒவ்வொரு மனிதனையும் பேயாக பிடித்து ஆட்டுவிக்கிறது. சுதந்திரம் பெற்றுவிட்டோம். பெருமைப்பட ஒன்றும் இல்லை.

சுதந்திரமான அடிமையாக வாழ்ந்து கொண்டிருக் கிறோம். மேலை நாட்டு அறிஞர்களும், விஞ்ஞானிகளும் கண்டுபிடித்த ஒவ்வொரு நவீன விஷயங்களும் அழிவையே கொடுக்கிறது.

ஆனால் நமது முன்னோர்கள் கண்டு உணர்ந்த, உணர்ந்து அறிந்துகொண்ட யோகம், பிராணாயாமம், தியானம், இவையெல்லாம் எந்த ஒரு மனிதனுக்காவது தீங்கை விளைவித்திருக்கிறதா? எவன் ஒருவன் அட்டாங்க யோகத்தில் இருக்கிறானோ? அவன் துன்பப்படுவதில்லை. ஆனந்தமடைகிறான். அட்டாங்க யோகம் திருமூலர் அருளியது. திருமூலர் 18 சித்தர்களில் ஒருவராவார்.

அட்டாங்க (எட்டு படிகள்) யோகம் என்ன என்பது பற்றியும், அதைச் சார்ந்த நமது உடலியல் மற்றும் உடற் செயலியல் பற்றியும் நாம் எழுதியுள்ள தினசரி வாழ்வில் நோய் தீர்க்கும் யோகப் பயிற்சி, பிராணயாமப் பயிற்சி, தியானப் பயிற்சி ஆகிய நூல்களில் தெளிவாகவும், முறையாகவும், விரிவாகவும் அறிந்து கொள்ளலாம். நமது பாரம்பரியம் மிக்க கல்விமுறையும், நமது முன்னோர்கள் நமக்கு கற்றுக்கொடுத்த வித்தைகளும் சாதாரண செடி கொடிகளுக்கு கூட துன்பத்தை கொடுத்ததில்லை.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் என் உள்ளம் வாடினேன் என்றுரைத்த வள்ளல் பெருமானின் வழிவந்தவர்கள் நாம். ஆனால் இன்று என்ன நடக்கிறது? கல்வியில் இருந்து பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களையே நாம் பயன்படுத்துகிறோம்.

அதன் விளைவு தீர்க்கமுடியாத மன நோயாகவும், உடல் நோயாகவும் மாறிவிட்டது. 90% சதவீதம் மக்கள் இன்று மருத்துவமனை வாசலில் தவம் கிடக்கிறார்கள். இந்த நிலை ஏன் வந்தது, எதனால் வந்தது? நமது கல்வி முறையையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் குழிதோண்டி புதைத்ததின் விளைவே ஆகும்.

ஒவ்வொருவருக்கும் சொந்தமாக வீடு வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அது தவறில்லை. ஒவ்வொருவரும் சொந்த வீடு கட்ட வேண்டும், ஆனால் வீடுகட்டுவதற்கு, வாழ்க்கையின் ஆதாரங்களான மரத்தை ஏன் வெட்ட வேண்டும். இங்குதான் நமது அழிவு ஆரம்பமாகிவிட்டது. ஒரு மரத்தை வெட்டும் ஒருவனுக்கு இன்னொரு மரத்தை வளர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருக்கிறதா? இல்லை.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்று உரைத்த வள்ளுவரை மறந்தோம். வாசி யோகம் பழகி, நீ வீடு பேற்றினை அடைவாய் என்றும், வாழ்க்கைக்கு ஆதாரமான ஆத்திச் சூழையையும் வழங்கிய அவ்வையாரை மறந்தோம், பத்முப்பாட்டு, பதிணெண் கீழ் கணக்கு, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, ஆசாரக்கோவை, புறநானூறு, அகநானூறு, ஞான வெட்டியான், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், இனியவை நாற்பது இப்படி நம்சான்றோர் வகுத்த நூல்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அனைத்தையும் மறந்தோம். A FOR APPLE என்று சொல்லி, அ என்றால் அன்பு, அறிவு,, அம்மா உட்பட எல்லாவற்றையும் மறந்தோம். அதனால் மகிழ்ச்சியை இழந்தோம். எங்கே போகிறோம்? அதுவும் தெரியாது.

ஓ... மானிட இனமே இப்போதாவது விழித்துக்கொள். ஏன் தெரியுமா? இறைவன் பூமியை சுத்தப்படுத்த நாள் குறித்துவிட்டார்? அவர் வரும் போது அவருக்கும் பிடித்தமான இயற்கை மட்டுமே இவ்வுலகில் மிஞ்சும்.

மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை (திருக்குறள்-244)

பொருள்:

பூவுலகில் உள்ள எல்லா உயிர்களையும் ஒன்றுபோல் கருதி பேணி (பாதுகாத்து) அவ் உயிர்களிடம் அருள்செய்பவனுக்கு, தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழும் தீய வினைகள், எதுவும் அவனை நெருங்குவதும் இல்லை, என்பது சான்றோர்கள் கூற்றாகும்.

எனவே மேற்கண்ட தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கூற்றுப்படி அன்பு, கருணை, ஒழுக்கம், நடுவு நிலைமை தவறாதிருத்தல், இயம, நியம விதிகளுக்கு உட்பட்டவர்கள் எல்லோரும் இயற்கையின் சொந்தக்காரர்கள். ஈஸ்வரனின் பிள்ளைகள் ஒருமனிதன் இயற்கையாக இருக்க வேண்டும் எனில் ஐயன், ஈசன், எம்பெருமான், மகாதேவன் நடராஜர் அருளிய யோகம் பழக வேண்டும். யோகம் பழக ஒருவருக்கு யோகம் இருக்க வேண்டும். யோகம் இருந்து ஒருவன் யோகம் பழகினால் யோகனாகிறான், யோகினி ஆகிறாள், யோகி ஆகிறான். யோகம் பழகுவோம். யோகனாக மாறுவோம் ஆரோக்கிய ஆனந்தத்திற்கு சொந்தக்காரராக ஆவோம். அரனின் அன்பைப் பெறுவோம்.

- யோகி. சிவனாந்தம்

அப்பர் பெருமானின் பழமொழிப் பதிகம் -2

1. கனியிருப்ப காய் கவர்தல்
2. முயல் விட்டு காக்கைப் பின் போதல்
3. அறமிருக்க மறம் விலை கொள்ளுதல்
4. பனிநீரால் பறவை செய்தல்
5. ஏதன் போர்க்கு ஆதனாய் அகப்படுதல்
6. இருட்டறையில் மலடு கறத்தல்
7. விளக்கிருக்க மின்மினி தீக்காய்தல்
8. பாழூரில் பயிர்க்கம்புக்கு எய்த்தல்
9. தவமிருக்க அவம் செய்தல்
10. கரும்பிருக்க இரும்பு கடித்தல்

என்ற இவை பத்தும் இப்பதிகத்தில் கண்ட பழமொழிகள். நற்சமயமாகிய சைவம் இருக்க, அதைப் பயன்படுத்தி வாழாமல், சமணம் என்ற தீய சமயத்தில் சென்றதற்கு இவையெல்லாம் உவமையாக அமைந்தன.

இந்தப் பதிகம் எல்லாப் பாடல்களிலும் பழமொழிகள் உவமையாக எடுத்துக் கொள்ளப்பட்டதால், பழமொழிப் பதிகம் என்று பெயர் பெற்றது. இன்னும் சில பாடல்களில் நாவுக்கரசர் பழமொழிகளைப் பயன் படுத்தி தான் சொல்ல வந்த கருத்துக்களுக்கு ஆழம் ஊட்டுகிறார். அவைகளில் சில:

மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரம் எய்தி 4-26-8
நரி வரால் கவ்வச் சென்று நற்றசை இழந்தது ஒத்தது 4-27-5
விளக்கத்திற் கோழி போன்றேன் 4-31-5
கழியிடைத் தோணி போன்றேன் 4-31-6
காம்பிலா மூழை போல 4-46-1
மத்துறு தயிரே போல மறுகுமென் உள்ளம் 4-52-9
மோத்தையைக் கண்ட காக்கைபோல 4-75-7
கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுவித்து 4-99-2
தழலை நீர் மடிக்கொள்ளன்மின் 5-12-6
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே 5-39-8
கூவலாமை குரை கடலாமையை, கூவலோடு ஒக்குமோ கடல் 5-100-5

பழமொழிகள் சொல்லப்படும் கருத்துக்களை எளிதில் விளங்கச் செய்வதற்காக பயன்படுத்தப் படுகின்றன. பழமொழிகளைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. மக்களின் பேச்சு வழக்கத்தில் நீண்ட காலமாக பழமொழிகள் பயன்படுத்தப்பட்டு இருந்தன என்பதை சங்க இலக்கியங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது.

நாவுக்கரசரும் அவ்வப்போது தான் கேட்டவற்றை பதிகங்களில் புகுத்தி தன் கருத்துக்களுக்கு மெருகு ஏற்றியுள்ளார்.இப்பழமொழிகள் வாயிலாக தான் சொல்ல வந்த செய்திகளை எளிதாக அறிந்துகொள்ள வகை செய்தார். இவையெல்லாம் நமக்கு கிடைத்த அரும் பெரும் செல்வங்கள். இவற்றைப் போற்றி பாதுகாத்து நம் சந்ததியருக்கு வழங்குவதே நம் தலையாய கடமையாகும்.

கயிலைமணி.
இரெ. இராதாகிருஷ்ணன்,
பிருங்கிவனம்.

லிங்கங்கள்

சிவன் வரலாறு

சிஸ்யன்: 'ஊர்வசி ரஸவாதசிட்சிகர், 'போகா; ஏழாயிரம் பற்றிவிளக்கியருள்க, குருவே.

குரு: பாதரஸம் இவ்வித்தையில் பயன்படுத்தப் பட்டதாலேயே இக்கலைக்கு 'ரசவாதம்' எனப்பெயர். Alchemy என்றழைக்கப்படும் ஆங்கிலமே இது. 'Khem' என்பது எகிப்தைக் குறிக்கும் பண்டைய அரபுமொழிச் சொல். பண்டைக்காலத்தில் எகிப்தில் மிகுதியான ரசவாதிகள் இருந்தனர். அந்த சாஸ்திரத்தை அந்தநாட்டின் பெயராலேயே 'கீமியா' என்றும் 'அல்கீமியா' என்றும் அழைத்தனர். Alchemy எனும் சொல்லும், 'Chemistry' என்னும் சொல்லும் அவற்றிலிருந்து ஏற்பட்டவைதான். 'ரசயானம்' எனும் சொல்லும், 'ரசவாதம்'எனும் சொல்லும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ளவை. ரசவாதத்தில் பலமுறைகள் உண்டு.

'ஊர்வசி ரஸவாதசிட்சிகா' எனும் நூலில் ஒருமுறை காணப்படுகிறது. 'போகர் ஏழாயிரம்' நூலில் வேறுமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தமுறைகளில் முப்பு, கந்தகம், செம்பு, பூலியூர், பாதரசம் போன்றவை கச்சாப் பொருளாகப் பயன்படும். ரசவாத ஆராய்ச்சியின் விளைவாகப் பலதரப்பட்ட ரசாயனப் பொருட்களும், மருந்துகளும் தோன்றின. 'ரசவாதம் கெட்டால் மருந்தாகும்' என்ற பழமொழி ஏற்பட்டது.

ரசவாதிகள் சித்தர்களாவும், மருத்துவர்களாகவும், சோதிடர்களாகவும், பல்துறைப் பேரறிஞர்களாகவும் விளங்கியதால் பலவகைப்பட்ட சித்தாந்தாங்கள் குறித்த தத்துவ நூல்களும் தோன்றின.

சிஸ்யன்: 'ரஸவாதத்தால்' என்னென்ன செய்யலாம் என்பதை விளக்கியருள்க, குருவே.

குரு: சிலர் செம்பைப் பொன்னாக்கினர், சிலர் பாதரஸத்தையும், வேறுசிலர் காரீயத்தையும் பொன்னாக்கினர். சிலர் மூலிகைச் சாறுகளையும் பயன்படுத்தினர். வேறு சிலரோ மந்திரங்களைப் பயன்படுத்தினர். இன்னும் சிலர் மனத்தில் நினைத்த மாத்திரத்திலேயே சாதாராண பொருட்களைப் பொன்னாக்கி வியக்க வைத்தனர்.

சிஸ்யன்: திருவாவடுதுறையில் போகர் இருந்த போது, கருவூர்; சித்தர் வேண்டியதைப் பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: ஞான நூல்களை கற்றறிந்த கருவூர் சித்தர் சோழநாட்டின் கருவூரில் பிறந்தவர். ஒருசமயம் பழநிமலைச்சித்தர் போகர் திருவாவடுதுறைக்கு வந்தார். அதையறிந்த கருவூர் சித்தர் அவரைச் சென்று வணங்கி தம்மை அவருடைய சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்.

'கருவூராரே! உன் குலதெய்வம் அம்பாள்; தினந்தோறும் அவளைவழிபடு. அவள் உனக்குவழிகாட்டுவாள்' என்று கூறி, வழிபாட்டு நெறிகளை கருவூராருக்கு உபதேசித்தார்.

சிஸ்யன்: போகர் உபதேசப்படி, கருவூரார் ஆற்றியபணிகள் பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: கருவூர் சித்தர், போகர் உபதேசப்படி உள்ளம் உருகி, அம்பாளை வழிபட்டார் உண்மையாகவே போகரின் வாக்குபலித்தது. ரசவாத சித்துகள் புரியும் ஞானவானாக கருவூர் சித்தர் உயர்ந்தார். சிவாலயங்களில் தங்கத்தால் சிவலிங்கங்களை கருவூர் சித்தர் உண்டாக்கி வைத்தார்.

சித்தரின் ரசவாத வித்தையின் மூலம் உருவான அச்சிவலிங் கங்கள் ஒருமுறை பார்த்தால் செம்புபோலவும், மறுமுறை பார்த்தால் பொன் போலவும் தோன்றும்.

கருவூர் சித்தர் காசிக்குச் சென்று விசுவநாதர் ஆலயத்திலும், தாமிரத்தில் வேதை செய்து தங்க மயமான லிங்கத்தை உருவாக்கி வைத்தார். 'சட்டைமுனிரசவாதம்' என்ற நூலில் பாதரசத்தை மணியாக்கி, அதற்கு உலோகங்கள், ரத்தினங்கள், உபரசங்கள் எல்லாவற்றினுடைய சத்துக்களையும் கொடுத்து, அவற்றை உயிருள்ள ரசமணிகளாக்கும் விதத்தையும் விளக்கிக் கூறுகின்றார்.

சிஸ்யன்: 'செயற்கை தங்கம்' செய்வது பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: பாதரசம், கால்சியம், பிளாட்டினம், தங்கம் ஆகியவற்றின் அணுத்தொகுப்பையும், அணுத்துகள்களின் தொகுப்பையும், அணுச்சிதைவு மூலம் மாற்றியமைத்துத் தங்கமாக்கலாம் என்பது தத்துவார்த்தாரீதியில் சாத்தியம். ஆனாலுங்கூட அதனை சாதிப்பதற்குரிய கருவிகள் இன்று நம்மிடையே கிடையாது. ஒரு ஊசிமுனையளவுதங்கம் செய்ய பலகோடி டாலர்கள் செலவிடவேண்டிவரும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சிஸ்யன்: ரசவாத சித்தியை தரும் மருந்து பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: சித்தர்கள் இரும்பை தங்கமாக்கும் மருந்து நம் உடலையும் தங்கம் ஆக்கலாம் என்று எண்ணித்தான் ரசவாதத்தில் ஈடுபாடு காட்டினர். இருள் தேகமான நம் உடலில் எல்லாவிதமான அசுத்தங்களும் உள்ளன. அசுத்தங்கள் நீங்கிய உடல் பொன்போல் ஒளிர்ந்து பல ஆண்டுகள் வாழ உதவும். இம்முறைப்படித்தான் திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தார். எந்த மருந்து ரசவாத சித்தியை தருகிறதோ, அதே மருந்துதான் நம் உடலில் உள்ள மலங்களை அகற்றி காயசித்தியை தரக்கூடிய ஆற்றல் படைத்தது.

ரசவாத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பலமருந்துகள் நோய்களில் பலவற்றை குணப்படுத்தவும்,சிலமருந்துகள் காயகல்பத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. 'காயம்' என்றால் மனிதஉடலை இளமையுடன் கெடாமலும், நோயணு காமலும் நீண்டகாலத்திற்கு உயிரோடு இருத்தலையே' காயகல்பம்'என்றழைக்கிறோம்.

சிஸ்யன்: காயகல்பத்தின் மகிமை பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: காயகல்பத்தில் மருந்துகளுடன் பலயோக முறைகளும் எடுத்தாளப்பட்டன. காயசித்தி நம் உடலின் நரை, திரைகளை மாற்றவல்லது. முதுமையை மாற்றி இளமையை தரக்கூடியது. இம்மருந்தை உட்கொண்டால் சூரியனைப்போல் கால, காலங்களுக்கும், அழிவில்லாமல், ஒளிபடைத்த உடலோடு வாழலாம். காயசித்தியைத் தருகின்ற மருந்தினை சித்தர்கள் 'மூப்பு' என்றழைத்தனர்.

மரணத்தைத் தவிர்த்து சிரஞ்சீவித் தன்மையை நல்கும் மருந்துகளையும் கூட காயகல்பவாதிகள், ரசவாதிகள் முதலானோர் பன்னெடுங் காலமாகக் கண்டுபிடிக்க முயன்றவாறு உள்ளனர். அமிர்த சீஞ்சீவி என்று இவ்வகை மருந்துகளை அழைத்தனர். இதற்கான மந்திரங்கள் கூட இருந்தன. பல்வேறு யோக சமாதி முறைகளையும், சித்தர்கள் கடைபிடித்தனர். 'Elixir of Life' என்பதும், 'Philosopher's Stone' என்பதும் இவ்வகை மருந்துகளைக் குறிப்பனவேயாகும்.

சிஸ்யன்: தெய்வீகரசவாதம், பேரின்பரசவாதம், இன்பர சவாதம், ஞானரசவாதம் பற்றிவிளக்கியருள்க, குருவே.

குரு: வேறு சில சித்தர்கள், ஆன்மாவைப் பயன்படுத்தி இறைப்பொருளுடன் ஒன்றுவதை வேறு விதமான ரசவாதமாகப் பயின்றனர்;. இதனையே 'தெய்வீகரசவாதம்' 'பேரின்பரசவாதம்', 'இன்பரசவாதம்', 'ஞானரசவாதம்' என்றழைத்தனர். சூஃபி ஞானிகள் இதனை 'கீமியாஏசஆதத்' என்று குறிப்பிடுவார்கள்.

சிஸ்யன்: பொன்னை சிவமாகவும், செம்பை ஜீவனாவும், களிம்பேறும் தன்மையை மலங்கள்பற்று நிலையாதல் பற்றி விளக்கியருகள்க, குருவே.

குரு:இயற்கையிலேயே பொன்னாக இருப்பது ஒருநிலை, ரசவாதத்தின் மூலம் உருமாறித் தோன்றிய பொன் மற்றொருநிலை. இவ்வாறு இருநிலைகளில் பொன் உள்ளது. அதுபோலவே 'இறைபொருள்' என்பது ஒருநிலை. பரிசுத்தமான ஆன்மா, கர்மங்களின் உபாதி கள் அற்று, இறைத்தன்மையை அடையும் நிலை யாகிய 'கைவல்யம்' என்பது இன்னொரு நிலை. செம்பு இயற்கையில் களிம்புஎனும் தன்மையை கொண்டுள்ளது.

பொன்னுக்கு அந்தக் குற்றம் கிடையாது. ரசவாதத்தின் மூலம் களிம்பே ஏறாத பக்குவ நிலையடைந்த செம்பு, பொன்னாகும் தன்மையைப் பெற்றுக் கொண்டது. அதுபோல மலங்கள் பற்றாத நிலையில் ஆன்மா பரிசுத்தமாகி பரமான்வாக விளங்கும் பொன்னை சிவமாகவும், செம்பை ஜீவனாகவும் களிம்பேறும் தன்மையை மலங்கள் பற்றும் நிலையாகவும் சில சித்தர்கள் உருவகப்படுத்துவர்.

அருணகிரிநாதர் இயற்றியதொகுப்பு நூலான 'திருவகுப்பு' எனும் நூலில் 'சித்துவகுப்பு' என்னும் பாடலில் ரசவாத வித்தையை தெளிவாக விளக்கியுள்ளார். ஆனால் அப்பாடலில் மறைபொருளாக விளங்குவது, 'ஞானரசவாதம்' ஆகும்.

சிஸ்யன்: ரசவாத வித்தையைக் கற்றுக்கொள்ள விரும்பிய செல்வந்தர்க்கு, வள்ளலார் பெருமானின் அறிவுரை பற்றி விளக்கியருள்க, குருவே.

குரு: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் செம்பை தங்கமாக்கும் ரசவாதவித்தையைக் கற்க முற்பட்ட பெரும் பணக்காரர், அவரது முயற்சியில் தம் செல்வம் அனைத்தையும் இழந்த நிலையில், தனது வீட்டைக் கடந்து சென்ற அருள் ஞானி வள்ளலார் பெருமானை கண்டதும், ஒடோடிசென்று, அவர்தம் கால்களில் விழுந்துவணங்கி, தாம் ஏழையான விதத்தை விளக்கிக் கூறி தேம்பி, தேம்பி அழத்தொடங்கினார். வள்ளலாரிடம் எப்படியேனும் ரசவாத வித்தையை கற்றுக் கொடுக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

வள்ளலார் ஒரு கண்ணாடி தம்ளரில் நிறையத் தண்ணீர் கொண்டுவருமாறு கேட்டார். தம்ளரில் நிறைய நீர் வந்ததும், அத்தண்ணீரில் சிறிது தெரு மணலை அள்ளிப்போட்டார். அம்மணல் தண்ணீருக்குள் விழுந்து, அடிப்பாகம் சேரும்போது பொன்னாகமாறி இருந்தது. இவ்வளவு எளிதாக இவ்வித்தை இருப்பதைக் கண்ட செல்வந்தர் அவ்வித்தையை அப்போதே கற்றுத் தருமாறு வள்ளலாரிடம் வேண்டிக்கொண்டார். அதற்கு வள்ளலார்,"இந்த ரசவாத வித்தை மிக, மிகச் சுலபம்தான். ஆனால் ஒன்றேஒன்று; பொன்னாசை அறவே அற்றவர்களுக்கு மட்டுமே இந்த வித்தை பலிக்கும்" என்று விளக்கிக் கூறினார்.

சிஸ்யன்: மகான் ஞானானந்தர் ரசவாத வித்தையை யாருக்கு சொல்லிக் கொடுப்பார் என்பதை விளக்கியருள்க, குருவே.

குரு: ஆதிகாலத்தில் மேருமலையில் ஞானானந்தர் ஆசிரமத்தில், ரசவாத வித்தையை அறிந்த ஞானானந்தர் என்னும் மகான் இருந்தார். ரசவாத வித்தையினால் இரும்பை பொன்னாக்குவார் என்றும், அந்த வித்தையை அவர் தமது பிரதம சீடனுக்கே சொல்லிக் கொடுப்பார் என்றும் பலரால் பேசப்பட்டது.

அப்பகுதியில் வாழ்ந்த அமர்சிங் எனும் கொடிய கொள்ளைக்காரன், சிரமப்பட்டு கொள்ளையடித்து உயிருக்குப் பயந்து வாழ வேண்டிய நிலை இல்லாமல் இருக்க, ரசவாத வித்தையைக் கற்க எண்ணினான். ஆகவே அமர்சிங் ஆசிரமத்திற்குச் சென்று, ஆசிரமத்திற்கேற்ற வகையில் தன்னுடைய தோற்றம், பழக்க, வழக்கங்களை மாற்றிக் கொண்டு, ஞானானந்தரின் சீடராக சேர்ந்து கொண்டான்.

ஆசிரமத்தின் விதிமுறைகளை மிகவும் ஒழுங்காகக் கடைப்பிடித்த தோடல்லாமல், ஞானானந்தர் சொற்பொழிவு ஆற்றும்போதும், தத்துவவிளக்கம் அளித்த போதும், உபதேசம் செய்யும் போதெல்லாம், உன்னிப்பாய் கவனிப்பான். ஞானானந்தரின் அருகிலேயே எப்போதும் இருந்து அவருக்குரிய பணிவிடைகளை முன்னின்று முனைப்பாகச் செய்துவந்தான். ஞானானந்தர் கேள்விகள் கேட்கும் போது, உரிய பதில்களை சொல்ல வேண்டி, அவனே அரிய பலநூல்களை சிரத்தையுடன் கற்றுத் தேர்ந்தான்.

ஞானானந்தர் ஆசிரமத்தில் பிரதமசீடராக அவருக்குப் பணிவிடை செய்ததால்தான் ரசவாத வித்தையை அவரிடமிருந்து கற்க இயலும் என்பதை உணர்ந்த அமர்சிங், பலவகையான யோகநிலைகளைக் கற்றாலே ரசவாதம் கைவரும் என்று பிறர் சொல்லக் கேட்டு, அட்டாங்கயோகம், ஜபயோகம் போன்றவற்றை மும்முரமாகச் செய்தான்.

'சத்யம் வச் தர்மம் சர', 'சத்தியத்தையே பேசு', தர்மத்தின் வழிநட', என்று வேதத்தின் சாரம் கூறுவதால் அவற்றையே தன் வாழ்வில் மேற்கொண்டான். அதனால் ஆசிரமத்தில் இருந்தவர்களிலேயே மிகச்சிறந்த சீடனாக விளங்கினான். ஞானானந்தர், தீட்சாநாமாகப் பெயரையும் 'ஆத்ம நந்தன்' என்று பெயரிட்டழைத்தார்.

ஞானானந்தாரின் உடல்நிலை மோசமாகி, ஆசிரம நடவடிக்கைகளை கவனிக்க இயலாதநிலையில், ஆத்ம நந்தனே, ஆசிரமப் பணிகளை மற்றசீடர்களின் உதவியோடு கவனித்து வந்தான். சொற்பொழிவுகள், விளக்கங்கள், உபதேசங்கள் அனைத்தையும் அவனே செய்தான். ஞானானந்தர் ஆத்மநந்தரை தன்னுடைய பிரதமசீடராக நியமித்து, தன்னுடைய வாரிசாக நியமித்து, ஆசிரமத் தலைமையையும் அவருக்கே தந்தார். ஞானானந்தர் மகாசமாதியடையும் காலம் வந்தது. அந்நிலையில் ஆத்மநந்தரைதன் அருகில் அழைத்தார். ஆசிரமத்தில் உள்ள அனைவரும், மகான் ஞானானந்தர், ஆத்மநந்தருக்கு ரசவாத்தை போதிக்கப் போகிறார்'என்றே எண்ணிக்கொண்டனர். ஞானானந்தர், "துருப்பிடித்த இரும்பு போன்ற சித்தம் படைத்த அமர்சிங் என்னும் பயங்கரவாதியை, களிம்பே ஏறாத பசும்பொன்னான ஆத்மநந்தனாக மாற்றியிருக்கிறேன். இது தானப்பாநான் இரும்பைப் பொன்னாகமாறச் செய்த ரசவித்தை",என்றார்.

Siva. M. Periasamy Pillai
M.A. M.Ed., B.Sc., B.L., P.G.C.T.E

பாம்பன் சுவாமிகள் மாத இதழ்
சந்தா செலுத்த வங்கி விபரம்

BANK: CITY UNION BANK

A/C NAME: KUMARAGURU PATHIPAGAM
BRANCH: T.NAGAR, CHENNAI-17
A/C NO. CA 001109600060273,
IFSC CODE: CIUBOOOOOO1

சந்தாதாரர்கள் தங்கள் ஊரிலிருந்தே சிட்டி யூனியன் பேங்க்கை அணுகி மேற்கண்ட அக்கவுண்ட் நம்பரில் தங்கள் சந்தாவை மறக்காமல் வருடந்தோறும் செலுத்தி புத்தகம் தடையில்லாமல் உங்களுக்கு கிடைக்கவும் குருவருளும், திருவருளும் பெற்றிடவும் வேண்டுகிறோம்.

தொடர்ந்து சந்தா செலுத்தாதவர்கள் உடனடியாக சந்தா செலுத்தி பத்திரிகை தொடர்ந்து பெற்று படித்து வரவும். சந்தா செலுத்தியும் புத்தகம் வராத அன்பர்கள் 044-24327544 தொடர்பு கொண்டு பேசவும் அல்லது இ-மெயில் அனுப்பவும் editor@pambanswamigal.com இப்படிக்கு, குமரகுரு பதிப்பகம் 5A, நான்காவது குறுக்கு தெரு, சி.ஐ.டி நகர் கிழக்கு, சென்னை -35.

பிறந்தநாள் வாழ்த்து

நமது பாம்பன் சுவாமிகள் பத்திரிகையில் திருப்புகழ்ப்பற்றி தொடர்ந்து எழுதிவரும் திரு.சே.பா.ரங்கவடிவேல் 6.7.2017 அன்று பிறந்தநாள் காண்கிறார். அவர் வாழ்வில் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று வாழ்ந்திட பாம்பன் சுவாமிகள் வாழ்த்துகிறார்.

ஹஸ்தினாபுரம் வி.வரதராஜன் 15.7.2017 அன்று பிறந்தநாள் காண்கிறார்.

அவர் வாழ்வில் எல்லா வளங்களும், நலங்களும் பெற்று வாழ்ந்திட பாம்பன் சுவாமிகள் அருளுகிறார்.

வேலூர் மஹாதேஜோ மண்டல செயலர் திருமிகு. மணி அவர்களின் மகன் திரு.எம்.அரவிந்த் 20.7.2017-ல் பிறந்தநாள் காண்கிறார்.

பாம்பன் சுவாமிகளின் குருவருளினால் நீண்ட ஆயுள், நீடித்த செல்வம், திடசிந்தனை, நலம் பலவும் பெற்றிட வாழ்த்துகிறோம்.

நாயன்மார்களும்.. திருக்குறளும்..

திருஞானசம்பந்த நாயனார் (பாகம்-2)

கடவுளைப் பார்த்தது உண்டா? கடவுள் எப்படி இருப்பார்? இப்படிக் கேள்விகளைக் கேட்டால்,பக்தி உள்ளவர்களுக்கு கூட பதில் சொல்வது என்பது ஒரு சவாலே. இதையே ஒரு காரணமாகக் கொண்டு, இறை நம்பிக்கையில் ஈடுபாடு இல்லாமல், நாத்திகராக இருப்பவரும் உண்டு. இதை பகுத்தறிவு என்று சொல்பவரும் உண்டு.

ஆனால், உண்மையில் பகுத்தறிவைப் பயன்படுத்தினால், இறைமையின் தத்துவத்தை உணர முடியும். இந்தப் பகுத்தறிவைப் பயன்படுத்தாமல், வெறும் சமய சம்பிரதாயங்களைச் செய்வதால், கடவுளைப் பார்க்க முடியாது என்பதை உணர்த்துவதே 'சைவம்' என்று உணர்த்துகின்றது திருஞானசம்பந்த நாயனாரின் வாழ்க்கையில் நடந்த இந்த முதல் அற்புதம்.

(2) அருவம், அருஉருவம், உருவம்.. இந்த புரிதல் சைவம்

கடவுளைக் காணப் பலரும் ஆவலுடன் இருக்க கடவுள் அருவமாகவும், அருஉருவமாகவும், உருவமாகவும் காட்சி தருகின்றார் என்பதைப் புரிந்துகொள்வதே சைவம். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் நடந்ததுதான் திருஞானசம்பந்தரின் வாழ்க்கையில்நடந்த இந்த முதல் அற்புதம்.

இறையருளால் பிறந்தக் குழந்தையைப் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்தனர். சிவபாத இருதயரும், பகவதி அம்மையாரும், சைவம் தழைக்க வேண்டும் என்ற உலகத் தேவைக்காக, தவம் இருந்து பெற்ற பிள்ளை அல்லவா...! வேகமாகக் காலம் ஓடியது. குழந்தைக்கு இரண்டு வயது முடிந்து, மூன்றாவது ஆண்டு துவக்கநாள்... சாதாரணமாகப் பிறந்தநாள் என்று தானே சொல்வோம்.

அது ஏன்? துவக்க நாள் என்று சொல்லப்படுகின்றது என்று சிந்தித்தால், சைவநெறி பரப்ப வந்த குழந்தைதானே, தன்னுடைய பணிகளை மூன்றாம் ஆண்டு முதல் துவக்கியதால் இதைத் துவக்க நாள் என்று சொல்வது சிறப்பாகவே இருக்கும்.

குழந்தையின் பிறந்தநாளை கொண்டாட, தாய் பகவதி அம்மையார், வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க, தந்தை கோயில் குளத்தில் குளித்துவிட்டு வருவதற்கு புறப்பட்டார். அப்பா வெளியே போவதைப் பார்த்துவிட்டு, தானும் அப்பாவுடன் செல்ல வேண்டும் என்று குழந்தை அடம்பிடித்தது. வீட்டு வேலைகளைக் கவனம் செலுத்தும்போது, குழந்தையைக் கவனிக்க இயலாது என்று கருதிய அம்மா, குழந்தையை உடன் அழைத்துச் செல்லும்படி வேண்டினார். சிவபாத இருதயரும் குழந்தையைத் தன்தோளில் தூக்கி வைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றார்.

தன் குழந்தையிடம், அமைதியாகக் குளக்கரைப் படியிலேயே அமர்ந்திருக்க வேண்டும். நான் குளத்தில் குளித்துவிட்டு வருகின்றேன் என்று அன்பாக எடுத்துச் சொல்லிவிட்டுக் குளத்தில் இறங்கினார். ஒரு அடி எடுத்து வைத்தவர், குழந்தையை நோக்கி அங்கும் இங்கும் செல்லக்கூடாது, யார் எது கொடுத்தாலும் வாங்கி சாப்பிடக்கூடாது என்று ஒரு தந்தைக்கே உரிய அக்கறையுடன் சொன்னார்.

குளத்தில் இன்னும் ஒரு அடி எடுத்துவைத்தவர், குழந்தை அமைதியாக படிக்கரையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். துறுதுறு என்று இருக்கும் குழந்தையை, இப்படி அதட்டி உட்கார வைத்துவிட்டோமே, நாம் குளத்தில் உள்ளே தலைமுழுக்கு போட்டு மந்திரம் சொல்லும் அந்த சில வினாடிகளில், அங்கிருந்து தெரிந்த கோபுரத்தைப் பார்த்து, இருகரங்களைக் கூப்பி... இறைவா, உன் அருளால் பிறந்த இக்குழந்தையை நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மனஉருகி வேண்டிக்கொண்டு குளத்தில் மூழ்கி, குல வழக்கப்படி மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

அப்பாவையே வைத்த கண்வாங்காமல் பார்த்துக்கொண்டு இருந்த குழந்தை, திடீரென்று அப்பாவின் தலை குளத்து நீரில் மூழ்குவதைப் பார்த்து வீல் என்ற அழத் தொடங்கியது. தண்ணீருக்குள்ளே மந்திரம் உச்சரித்துக்கொண்டு இருந்த சிவபாத இருதயருக்கு தன் குழந்தையின் அழுக்குரல் கேட்கவில்லை.

ஆனால், எங்கும் நிறைந்த இறைவனுக்கு கேட்டு, அழுகின்ற குழந்தைக்குப் பால் கொடுக்கச் செய்து அமைதி பெறச் செய்தார். சில வினாடிகளில் குளத்தில் மூழ்கிய தலையை வெளியே எடுத்துப் பார்த்த சிவபாத இருதயர் தன் குழந்தையின் வாயின் இருபுறமும் பால் வழிந்து கொண்டு இருப்பதைப் பார்த்து அதிர்ந்தார். (இதனால் பின்னாளில் பால் அறா வாயன் என்ற ஒரு பெயர் திருஞானசம்பந்தருக்கு அமைந்தது)

அப்பாவின் அதட்டலைக் கண்டு மிரளாமல், மலர்ந்த முகத்துடன் தனக்குப் பால் கொடுத்தவரைப் பற்றி தன் தொடைகளைத் தட்டி தாளம் போட்டு பாடலாக பாடினார் தெய்வக் குழந்தை திருஞானசம்பந்தர்.

'தோடுஉடைய செவியன் விடையேறி–
ஓர் தூவெண்மதி சூடி
காடு உடைய சுடலைப்பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன்'

இப்பாடலைக் கேட்ட சிவபாத இருதயர் ஆச்சரியத்தில் உறைந்து போனார். மழலை குரலில் தத்தித்தத்தி பேசிய தன் குழந்தை இப்படி ஒரு பாடலை, தாளத்துடன் பாடியதை நினைத்து சற்று உறைந்து போனார். குழந்தை பொய் சொல்லாது, நாமோ சில வினாடிகள்தானே குளத்தில் மூழ்கி இருந்தோம் என்று சிந்தித்து, குழந்தையிடம் பால் தந்தவரைக் காட்டு என்று கேட்டார்.

கோபுரம் இருக்கும் திசையை நோக்கி தன் பிஞ்சு கைகளைக் காட்ட, அங்கே சிவபெருமான் காட்சியளித்தார். குழந்தைக்குக் காட்சியாகத் தெரிந்த இறைவன், சமய சம்பிரதாயங்களைச் செய்யும் சிவபாத இருதயருக்கு தெரியவில்லை. ஆனால் இவ்வளவு அற்புதமானப் பாடலைப் பாடியது சாதாரண செயல் இல்லை. இது இறையருளால்தான் நடைபெற்றது என்பதை உணர்ந்தார் சிவபாத இருதயர்.

குளத்தில் மூழ்கிய சில விநாடிகளில் எப்படி ஒரு குழந்தை பாலைக் குடிக்க முடியும். ஆனால், பால் வாயில் இருபுறமும் இருந்தது. இதிலிருந்து இறைமை 'அருவமாக' எங்கும் இறைந்து நிறைந்து உள்ளது என்று நம்மால் உணர முடிகின்றதுதானே! இப்படி எங்கும் இறைந்துள்ளதால்தான் இறைவன், இறைவி என்ற வினைச்சொல் வழக்கில் வந்தது. அதுவே பெயர்ச்சொல்லாக மாறி இறைமைக்கு உருவம் தரக் காணமாகிவிட்டது. இறைவனுக்கு 'உருவமே' இல்லையா என்ற கேள்விக்கும், இந்த அற்புத நிகழ்விலேயே பதில் அமைந்து தினமும் இறைவனை வழிப்பட்ட சிவபாபத இருதயருக்கு, குழந்தை காட்டிய இறைஉருவம் தெரியவில்லை.

இதிலிருந்து ஒருவருக்கு தோன்றும் இறைஉருவம், அப்படியே மற்றொருவருக்கு தோன்றவேண்டிய அவசியமில்லை என்ற புரிதலை சைவம் உணர்த்துகின்றது இந்த அற்புத நிகழ்வு. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான உருவக் காட்சியைத் தராத இறைமைக்கு நாம் ஒரே உருவம் தருவது சரியாக அமையுமா..!

சைவத்தில் இறைமையைப் பற்றிப் புரிதல் சரியாக அமைந்துள்ளது. இதற்குச் சான்றாக விளங்குவது சைவத்தின் ஆதிபகவன் என்று அழைக்கப்படும் சிவபெருமானை 'அருஉருவமான' லிங்கமாகத்தான் வழிப்படுகின்றோம்.

'அருவம்' தான் இறைமை என்பதை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளவே சைவத்தை நிலைநிறுத்த வந்த திருஞானசம்பந்தரால் இந்த அற்புதம் நிகழத்தி காட்டப்பட்டுள்ளது.

'யாமே அளித்தோம் என்று இறைமையால் அசரீரியாகச் சொல்லப்பட்டத் திருக்குறளும் இதையே எடுத்துச் சொல்கின்றது. இந்த உலகில் நடைபெறும் எல்லாச்செயல்களுக்கும் அடிப்படையாளக் காரணத்தைத் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டுப் போனால் (பகுத்து அறிந்தால்) இறைமைதான் முதலாக, துவக்கமாக அமைந்துள்ளது. அதனால்தான் இறைமை என்ற ஆதிபகவனை முதல் அடிப்படையாகக் கொண்டே உலகம் அமைந்துள்ள என்கிறது உலகப் பொதுமறை, எப்படி எல்லா மொழிகளுக்குமம் 'அ' என்ற எழுத்து முதலாக அமைக்கின்றதோ அதுபோல என்ற உதாரணத்துடன்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

திருக்குறள் தென்றல் தங்கமணி

ஸ்ரீலஸ்ரீ பட்டினத்தார் தத்துவக் கருத்துக்கள் (வாக்கு)

1. ஆசையில் உழலும் மனிதர்கள் நிலையில்லாத இந்த உடலைப் பாதுகாக்கப் பல உயிர்களைக் கொன்று, அவற்றின் ஊனினைத் தின்று, கர்வப்பட்டுப் பிறகு உடல் மெலிந்து, எமதர்மன் (காலன்) வந்து பிடித்துத் தண்டனை அளிக்கும் போது என்ன செய்வார்கள்?

2. ஆசையே வடிவாகக் கொண்ட மனிதன் பணம் பணம் என்று அலைந்து அதை ஏராளமாகச் சம்பாதிப்பான். அந்தப் பொருள்களை நல்ல காரியங்களுக்குச் செலவிடமாட்டான், கேடு கெட்ட மாதருக்கு அளித்து மகிழ்வான்!

3. ஆசையோடு கட்டியணைத்துக் கொஞ்சிக் குலாவும் மனைவியும், அன்போடு வளர்த்த மக்களும் காட்டில் காய்ந்த மரத்தை வெட்டி சாய்ப்பது போல எமதர்மன் வந்து உயிரைப் பறித்துச் சென்றபிறகு உற்றார் உறவினரோடு அழுது புலம்புவார்கள்.

4. செத்தபிறகு ஆசை மனைவி, அன்புமக்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருமே பிணத்தை அப்புறப்படுத்த எண்ணுவார்களே தவிர, போய்விட்டானே... அவனுடன் நாமும் போவோம் என்று கனவிலும் நினைக்கமாட்டார்கள்!

5. ஆசையுள்ள மனிதன் தனது உடம்பை வளர்க்கப் பல உயிர்களைக் கொன்று தின்கிறான். இவனுக்கு நாம் இப்போது கொல்கிறோமே. அவை நம்மைப்பின் ஒரு பிறவியில் பழிவாங்கிவிடுமே. கொன்றுவிடுமே என்பது தெரியாது.

6. ஏராளமான செல்வமும் சுகபோகங்களும் ஆசைக்கு வித்தாக இருந்தாலும் அவை எல்லாம் நிலையற்றவையாகும்!

7. மனிதனே! இந்தப் பிறவி போதாதா? இன்னுமா பிறவித் துன்பத்தில் உழல ஆசைப்படுகின்றாய்? மாபெரும் மன்னர்களைப் போல சுகபோகங்களை அனுபவித்தவர்களை செத்தபிறகு எரியூட்ட கட்டை மீது தானே கிடத்தி வைப்பர்!

8. உலகில் மூன்று ஆசைகள் முக்கியமாகத் தொல்லை கொடுப்பவை. வாழ்க்கையையே பாழ்படுத்தக்கூடியவை. ஒருவருக்கு மண்ணாசை ஏற்பட்டுவிட்டால் அவரை உயிருடன் இருக்க விடாது! மண்ணாசையின் காரணமாகவே மன்னாதி மன்னர்களும் மாண்டு போனார்கள்!

9. பெண்ணாசையினால் எத்தனையோ அரசுகள், குடும்பங்கள் அழிந்து போயிருக்கின்றன! பெண்ணாசையினால் ஒருவன் தன் உயிரையும் விட்டுவிட நேரிடும்.

10. பொன்னாசை அதாவது பணத்தாசை காரணமாக மனிதன் எத்தகைய கீழ்த்தரமான செயலையும் செய்யத் தயங்கமாட்டான்! அரச தண்டனைக்கும் பயப்படமாட்டான்! இந்த ஆசை அவர்கள் இறக்கும் போதுதான் விட்டுப்போகும்!

11. மனிதன் சுகபோக வாழ்க்கையிலே மூழ்கி

நிலையற்ற வாழ்க்கையை நிலையானதாக எண்ணி, மரணமடைந்து மண்ணோடு மண்ணாகிறானே என்ன அறிவீனம்!

12. இல்லறச் சுகங்களைத் துறந்து, துறவறம் பூண்டு விருப்பு வெறுப்பின்றித் தூய வாழ்க்கை வாழ்பவன் இல்லறத்தானினும் பல கோடி உயர்ந்தவன்!

13. மனித ஆசையை அடைவதில் வீடுபேற்றினை அடைவதையே பெரும் பேறாகக் கொள்ள வேண்டும்.

14. இம்மையில் பொருளும், பலவகை வளமும் நிறையப் பெற்று இன்ப வாழ்க்கையில் அழுந்தினும் அழுந்துக! அங்ஙனமில்லாது துன்பத்தால் இடருற்றாலும் உறுக!

15. ஆசையால் மயங்கி மாசடைந்த மனமே காணப்பட்ட பொருள்கள் மறையும், உட்கொண்ட பொருள் மலமாம், பூசப்பட்ட நறுமணப்பொருள்கள் அழுக்காகின்றன.

16. ஆசைக்கு அடிமையானவன் என்ன செய்யத்தான் தயங்குவான்? அவனுக்கு அவன் ஆசை நிறைவேற வேண்டியது ஒன்றுதான் முக்கியம் அதற்காக அவன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வான்! பொய் சொல்ல தயங்க மாட்டான். இழிந்த காரியத்தைச் செய்யவும் பின் வாங்க மாட்டான். ஆசை பூர்த்தியாக கொலையும் செய்யத் துணிவான்.

17. உலகத்திலே சிற்றினத்தார் வாழ்க்கைக்கும் சீரடியார் வாழ்க்கைக்கும் வேறுபாடு உண்டு! சிற்றினத்தார் வெறும் ஆசையிலேயே உழல்பவர்கள், சீரடியார் இறைவனது பற்றிலேயே காலத்தை கழிப்பவர்கள்.

18. தலையணைக்குப் பஞ்சு அடைப்பது போலத் தாம் வயிற்றுக்குச் சுவையான பல உணவுப்பொருள்களைத் திணிப்பவர்கள், துறவிகளுக்கும் நல்லோருக்கும் ஒருபிடி அன்னம் அளிக்க மாட்டார்கள்.

19. உலகமே மாயை, எவையும் நிலையானதல்ல செல்வமோ, சுகபோகமோ மனைவி மக்களோ எதுவுமே நிலையானதல்ல. இதை மனிதன் உணரவில்லையே!

20. மனிதர்கள் சும்மா இருக்க மாட்டார்கள், வீண் விவகாரங்களைக் கிளப்பி விதண்டாவாதம் செய்து வலுச் சண்டைக்குப் போய் வருவார்கள். ஏதோ தங்கள் பக்கம் நீதியிருப்பது போல பலரிடம் செய்த தவறை நியாயப்படுத்திப் பேசுவார்கள்.

21. மனிதனுக்குத் தெரியாததென்று எதுவும் கிடையாது! தெரிந்தும் அவன் மயக்கத்தில் வீழ்ந்து மடிகிறான். அந்த மயக்கம் விதியின் விளையாட்டு என்று அவன் எண்ணுவதே இல்லை

22. அன்பாகப் பேசத்தெரியாத கொடியவர்கள் கெட்ட நடத்தை உடையவர்கள், கேவலமாக குடியில் பிறந்தவர்கள், கொலை – களவு போன்ற பாவங்களைச் செய்யும் மடையர்கள், ஆகியோர் பனைமரம் போபல வளர்ந்தவர்களே அன்றி சான்றோர்கள் காட்டிய பாதையில் செல்லத்தெரியாதவர்கள்.

23. எவ்வளவோ பேசுகின்ற மனிதன், பிறக்கும் போது சொத்து சுகங்களைக் எடுத்து வந்தானா? இல்லை இறந்து காடு போகும் போது எதையாவது எடுத்துக்கொண்டு போகிறானா?

24. மனிதன் இதுதான் தனது பிறவி என்று நினைக்கிறான். இதற்கு முன் பிறந்ததாகவோ இந்த பிறவிக்குப் பின்பிறவி உண்டெனவோ நினைப்பதே இல்லை! இது எவ்வளவு தவறு!

25. மனிதனாகப் பிறந்தவன் பிறருக்கு உதவும் பண்பாளராக இருக்க வேண்டும், பிறர் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி அவர்கள் துன்பத்தைப் போக்கிப்பாடுபட வேண்டும்.

பாம்பன் சுவாமிகள்
அருள்நெறி அறக்கட்டளை நிறுவனர்
'சித்தர் ஒளி' ' வி. ரவிச்சந்திரன்

வழிபடும் தொழிலை வழங்கிடக்கோரும்

திருப்புகழ்

முருகு என்றால் அழகு. முருகன் அழகுக்கு ஓர் உறைவிடமான தெய்வம் முருகக்கடவுள் அவருடைய திருமேனி அழகுக்கு ஒரு கருவூலம். முருகப்பெருமான் என்றும் மாறாத இளமை நலம் உடையவர். முருக மூர்த்திக்குரிய அநேக சிறப்புகளில் முதன்மையும், வேறு எந்த தெய்வத்திற்குமில்லாத தன்மையும், இந்த மாறாத இளமையே ஆகும். ஆதலால் பாம்பனடிகள் அடிக்கடி 'இளம்பூரணன்' என்று முருகபெருமானை குறிப்பிடுவார்கள் என்றும் குழந்தை வடிவாக நின்று அடியவர்களுக்கு இன்ப அருள் பாலிக்கும் தெய்வம் முருகன். தன்பால் உருகி வந்த அடியவர்க்கு முருகன் இன்முகம் காட்டி, முன்னின்று வேண்டியவர்க்கு வேண்டிய வரம் கொடுத்து அருள்புரிவான்.

முருகபெருமான், ஏனைய மொழிகளுக்கு பொதுக்கடவுளாகவும், தமிழ் மொழிக்கு சிறப்புக் கடவுளாகவும் விளங்குகின்றான். மதுரையில் நாற்பத்தொன்பது புலர்வகளுடன் தாமும் ஒருவராயிருந்து தமிழராயிருந்து, அகத்தியருக்கு தமிழைப் போதித்தும், நக்கீரருக்கும், அருணகிரிநாதருக்கும், திருமால் அடியெடுத்து கொடுத்ததும் இதனை விளக்கும்.

அம்மையப்பனை சுற்றி வந்து ஞானக்கனி பெற்றார் கணபதி. உலகை வலம் வந்து கனியைப் பெறும் வாய்ப்பை இழந்தார். கந்தப்பெருமான் என்பது கதை. உலகை விட்டவர்க்கு கணபதியும், உலகிலிருந்தே முக்தி விழைவோர்க்கு முருகனும் குருவாகிறார்கள் என்பதே இதன் உட்பொருள், சிவனார் மனங்குளிர இரு செவி மீதிலே உபதேசம் பகர்ந்தவனுக்கு, தாய் தந்தையரின் பெருமை தெரியாதா என்ன? யோகத்தில் மூலாதாரமாகிய தோற்றுவாயில் கணபதியும், உச்சமான சஹஸ்ரத்தில் முருகனும் காவல் என்பார்கள்.

இளம் பூரணனது இன்னருளினை, இனிது பெற்று அருணகிரிநாதர் தாம் பெற்ற அருட் திறத்தை. அகில உலகுக்கு உணர்த்துவதற்காக ஒதுவித்த அருட் புகழே திருப்புகழாகும். அருணகிரிநாதர் அளவற்ற தவம் புரிந்தவராதலால், சிவகுருவாம் செவ்வேட் பரமனே குருமூர்த்தியாக வெளிப்பட்டு, உபதேச முகத்தால் அனுபவ ஞானத்தை உணர்த்தியருள, உணர்ந்தவர்.

அருணகிரிநாதர் பரம ஞானி, உடற்பற்று, உயிர்பற்று, பொருட்பற்று அனைத்தும் விட்டவர். திருவடி பற்று ஒன்றே உடையவர். இந்த உலகத்தில் ஆதாரமானவை எதுவுமில்லையென்றும், முருகன் திருவடி ஒன்றே புகலிடம் என்றும் தெளிந்து, தெளியாதவரை தெளிவிக்குமாறு திருப்புகழைப் பாடியருளியுள்ளார்.

அருளாளர் அருணகிரிநாதர் கருணையின் வடிவமாக, பொறுமையின் சிகரமாக, வாய்மையின் விளக்கமாக ஞான வடிவமாக இருந்து உலகை உய்விக்கும் உன்னத நோக்கத்துடன் இருந்தமையால், கருணைக்கு அருணகிரி என்றும், வாக்கிற்கு அருணகிரி புகழ்ப்பெற்றார். இவரைப் பாம்பன் சுவாமிகள் குருவாக ஏற்று பாடல்களைப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்கள் முழுவதும் அறநெறி, ஆன்மீக நெறி, தெய்வநெறி, ஞானநெறி என்பவைகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளன. எக்காலத்திற்கும் ஏற்புடையதாய் அமைந்துள்ள திருப்புகழ், மக்கள் மனத்தில் ஆன்மீக நெறியினை வளர்க்கும்.

மக்கள் இவ்வுலக வாழ்வில் மூழ்கி பொய்களை உண்மைகளைப் போல் பேசி ஆன்றோர்களிடமிருந்து விலகி நின்று. பலவிதமான பாவங்களை செய்து, கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டு, துன்ப மிகுதியினல் நிலை தடுமாறி உயிருக்கு இறுதி தரும் இன்னல்களில் விரும்பி உழல்வது குறித்து, கவலை தெரிவிக்கும் கருணை முனிவர் அருணகிரியார். அவர் தனது பிழைகளை பொறுத்து, பாவங்களை நீக்கி, அவர்களுக்கும், இவ்வுலகில் கடைத்தேறும் வழியை தருமாறு பரிவுடன் சில பாடல்களில் முருகனை வேண்டுகிறார்.

இறைவன் நமக்கு தந்த உடம்பை கருவி கரணங்களையும் கொண்டு, இனி பிறவாத பேற்றினை பெற வேண்டுமென்று வற்புறுத்துகிறார். பக்தி நெறி சென்று, இறைவனை வழிபட்டு அவனது திருவருட்பெருமையை நினைத்து, நினைத்து உருக வேண்டும் என்று அறிவுறுத்துவதுடன் நமது அன்றாடப் பணிகளில் இறைவனைத் தொழுவதையும் தவறாமல் மேற்கொள்ள வேண்டுமென்றும், நம்மை நம்பியவர்க்கு அருள் செய்து துன்பத்தை நீக்கும் பேராற்றலை உடையவன் முருகபெருமான் என்றும் காலனால் வரும் அச்சத்தை போக்க முருகன் ஒருவனால் மட்டுமே முடியும் என்று அறுதியிட்டு தெரிவிக்கிறார்.

துன்பப்படுபவர்கள் தான் இறைவனை வணங்க வேண்டும் என்றில்லாமல், வசதியான வாழ்க்கை வாய்க்கப்பெற்றவர்களும், அவை என்றும் நிலையானவை என்று எண்ணி மயங்கிவிடாமல், வழிபாடு செய்வதை நிறுத்தக் கூடாது என்றும், தங்களுக்கு வாழ்வளித்த வள்ளி மணாளனை வழிபாடு செய்வதை அன்றாட பணியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அருளை தருமாறு பழநிமலை முருகனிடம் வேண்டியும் ஒரு திருப்புகழ் பாடியுள்ளார். அந்த அருமையான திருப்புகழின் இனிமையினை இம்மாத இதழில் சுவைத்து இன்புறுவோம்.

அருத்தி வாழவோடு தனகிய மனைவியு- முறவோரும்
அடுத்த பேர்களு மிதமுறு மகவொடு – வளநாடும்
தரித்த வூருமெ யெனமன நினைவது-நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது-தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக-வுபதேசம்
இசைத்தநாவின இதனுறு குறமக-ளிருபாதம்
பரித்த சேகர மகபதி தரவரு-தெய்வானை
பதிக்கொ னாறிருபுயபழ நியிலுறை-பெருமானே

ஆசையை விருத்தி செய்கின்ற இந்த வாழ்க்கையில், மனமகிழ்வு தரும் மனைவியும் கற்றதாகும், நண்பர்களும் இன்பம் நல்கும் குழந்தைகளும், வாழ்கின்ற செழிப்பான நாடும், குடிபுகுந்த ஊரும், நிரந்தரம் என்று மனம் நினைக்கும் பொய்யான எண்ணத்தை நினைக்காமல், உன்னையே நினைத்தும், துதித்தும் வழிபடுகின்றதுமான தொழிலை எனக்கு நீ தர வேண்டும். ரிஷபமாகிய நந்தியை வாகனமாகக் கொண்டு ஏறிய சிவபெருமானின் செவிக்குள் புகுமாறு, வேதமந்திரத்தை உபதேசம் மொழிந்தருளிய, இனிய நாவினை உடையவனே!

தினைப் புனத்தின் பரணில் இருந்த வள்ளியின் இருபாதங்களையும் தாங்கிய, திருவடியை உடையவனே! தேவேந்திரன் தவப்பயனால் பெற்ற தெய்வயானையை தேவியாகக் கொண்ட பன்னிரு கரத்தானே! பழனியில் வீற்றிருக்கும் பெருமானே! உன்னை வழிபடும் தொழிலை தருவாயே அருணகிரிநாதர் கனிவுடன் வேண்டுகிறார்.

விருப்பமோடு திருப்புகழைப் படிப்போர் மனத்தில் எவ்வித சஞ்சலமும் வாராது. இடுக்கனை அறுத்திடும் திருப்புகழ். இசைத்தமிழ் தந்திடும் திருப்புகழ். இலக்கணம் தந்திடும் திருப்புகழ். ஆக, திருப்புகழை நாம் கற்று அறிவோமேயானால் தெய்வநெறி நமக்கு கிடைக்கும்.

இத்தகைய தெய்வத் திருமறையாம் திருப்புகழை எப்போதும் தப்பாது ஒதி ஒதி, உணர்ந்து உணர்ந்து உருகி, உருகி வழிபாடு செய்து உய்வோமாக.

திருப்புகழ்ச்செம்மல்
சே.பா.ரங்கவடிவேல்

தமிழர் திருமணத்திற்கு வழிகாட்டி முருகனே!

தெய்வம் மனிதனாவது

அவதாரங்கள் என்பது தெய்வம் மனிதனாக பிறந்து வாழ்வதைக் கூறுகிறது. அப்படிமுருகனும் பிறந்து திருப்பரங்குன்றத்தில் ஒரு திருமணமும் புரிந்திருக்கிறான்! தெய்வங்கள் மனிதராய் பிறவி எடுப்பதற்கு இரு காரணங்கள் கூறுவர் பெரியோர். ஒன்று வாழ்ந்து காட்டுவது, மற்றொன்று தேவர்களுக்கு கிடைக்காத முத்தி (மோட்சம்) மனிதர்களுக்கு மட்டுமே கிடைப்பதும் அதைப் பெறுவதற்காகவும், தேவர்களுக்கு கிடைக்கும் அமுதம் சாவாத் தன்மைதரும் முத்தி தராது!

கந்தபுராணம்

முருகனைப் பற்றி விரிவாகக் கூறும் நூல் கந்த புராணம், இது வெறும் கதை அல்ல. தத்துவக் கருத்துக்களை மிகுதியாகக் கொண்டது. தத்துவங்களைப் புரிந்துகொள்வது கடினமாயிருப்பதால் கந்தபுராணத்தில் இல்லாத புளுகு எந்த புராணத்திலும் இல்லை" என்று ஒரு சொல்வழக்கு உருவாகிவிட்டது. இந்த பழமொழியின் சரியான பொருள் கந்த புராணத்தில் இல்லாத புலமை எந்த புராணத்திலும் இல்லை" என்பது தான். முருகன் இருமணம் புரிந்தான் என்பதும் ஓர் தத்துவம் தான்.

மூன்று சக்திகள்

முருகனே ஒரு சக்தி. அவனோடு இரு சக்திகள் இணைந்ததைத்தான் இருமணம் புரிந்தான் என்கிறோம். எனவே இருதார மணத்தடை என்கிற சட்டமெல்லாம் கடவுள் முருகனுக்கு கிடையாதா?" என்று விதண்டாவாதம் பேசக்கூடாது. வள்ளிதான் இச்சா சக்தி. தெய்வாணை கிரியா சக்தி. இவர்களை மணம்புரிந்த முருகனே ஞானசக்தி அவன் கைத்திருவேலே ஞானத்தின் சின்னம்!

இச்சை என்பது ஆசை, விருப்பம். வள்ளியை முருகனே விரும்பி மணந்து கொண்டான். கிரியை என்பது செயல், உழைப்பு. இல்லறமாகிய நல்லறத் கிரியை நடத்த தகுந்த துணையாக தெய்வானையை பெற்றோர் விருப்பப்படி மணம் பேசி முடித்தனர். எனவே அவள் கிரியா சக்தி. ஞானம் என்பது அறிவு. ஆசையை அளவுபடுத்தி (அடக்கி) உழைப்பில் (கடமை) கவனம் செலுத்தி வாழஅறிவு பயன்படும். இந்த தத்துவ, விளக்கமே வள்ளி தெய்வானையுடன் முருகன் அமர்ந்த திருக்கோலம். மேலும், கிரியை என்னும் கடமையை

கர்மயோகம் என்கிறது பகவத்கீதை!

வலமும் இடமும்

வள்ளியை வலப்பக்கமும், தெய்வானையை இடப்பக்கமும் கொண்டுள்ளான் முருகன். வள்ளிமானிடப் பெண்ணாய் (வேடர் குலத்தில்) வளர்ந்தவள் தெய்வம் மனிதருக்கு முன்னுரிமை கொடுத்து அருள்புரியும் என்பதை விளக்கவே வள்ளியை வலப்பக்கம் வைத்தான் தேவேந்திரனால் வளர்க்கப்பட்டவள் தெய்வானை. எனவே இடப்பக்கம் வைத்தான். இரண்டாவது இடம் தரப்பட்டது. வள்ளி தெய்வானை என்று தானே சொல்கிறோம்!

இருவரின் முற்பிறவி

ஒரு சமயம் திருமாலின் ஆனந்தக் கண்ணீரிலிருந்து இரு பெண்கள் தோன்றினர். அவர்களில் ஒருத்தி சுந்தரவல்லி, மற்றொருத்தி அமுதவல்லி. தெய்வத்தின் திருவருளாணைப்படி அமுதவல்லி தெய்வானையாக தேவேந்திரனிடம் வளர்ந்தாள். காட்பாடியை அடுத்த மேற்பாடியில் சிவமுனிவர் என்பவர் தவம் புரிந்தார். அவரது தவத்தின் ஆற்றலால் அருகிலிருந்து மான் ஒரு பெண் குழந்தையை ஈன்றது. அது ஒரு வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் குழந்தையை இட்டது. வேட்டுவ வேந்தன் நம்பிராஜன் எடுத்து வள்ளி என்று பெயரிட்டு வளர்த்தான். இவ்வாறு மால்மகள் மான்மகளானாள்!

பிறவி நோக்கம் மறந்தவள்

தேவருலகில் வளர்ந்த தெய்வானை பிறந்தது முதலே முருகன் நினைவில் வளர்ந்தாள். மானிடப் பெண்ணாய் பிறந்த வள்ளி முருகனை மறந்தாள். தேவருலகில் மாயை எனும் மனமயக்கம் (அறிவு மயக்கம்) இல்லை. பூவுலகின் மாயை வள்ளிக்கு மறதி தந்துவிட்டது! சூரனை வென்று திரும்பிய வீரனான முருகனுக்கு தெய்வானையை மணமுடித்து வைத்தான். இவ்வாறு தெய்வானை திருமணம் எளிதாய் முடிந்தது! இது பெற்றோர்களும் பேசி முடிக்கும் திருமணம். மணந்த பின் ஒருவரை ஒருவர் காதலிப்பர். இது தமிழர் திருமணமுறையில் கற்பு நெறியை சார்ந்தது. மற்றொருவகைதான் களவு. நெறி களவு என்பது திருட்டு அல்ல.

வள்ளித்திருமணம்

மானிடப் பெண்ணாய் வளர்ந்தால் வள்ளியால் முருகனை உணர்ந்து கொள்ள முடியவில்லை. மானிடப் பெண் வள்ளியை மணம்புரிய வேண்டிய கடமை முருகனுக்கு உள்ளதை நாரதர் நினைவூட்டினார். எனவே தெய்வமே மானிடத்தை தேடி வரலானது! வேடனாய் வந்தார். வெகுண்டாள்,மருண்டாள். அஞ் சினாள் வள்ளி. அப்பொழுது பெற்றோர் (வளர்த்த நம்பிராஜன்) வந்ததால் வேலன் வேங்கை மரமானான்! வயோதிகனாய் (கிழமாய்) வந்தால் காரியம் பழமாகும் என்று கிழமாய் வந்தான். அப்பொழுதும் வள்ளி பால்முருகனை உணர முடியவில்லை.

இந்த முயற்சியில் ஈடுபடும்முன் முன்னவராகிய அண்ணன் கணேசனை வழிபட மறந்த முருகனுக்கு இப்பொழுது நினைவு வந்தது. யானை முருகனை வேண்ட தம்பிக்கு உதவ யானை வள்ளி அஞ்சிலுடி தாத்தாவிடம் அடைக்கலமானாள். அச்சத்தால் மயக்க முற்றாள். மயக்கம் தெளிந்து எழுந்த வள்ளி தன் தெய்வம் முருகன் மடியில் இருப்பதை உணர்ந்தாள்! விரட்டிய யானை எதிரே அமைதியாக துதிக்கை தூக்கி இருவரையும் ஆசீர்வதித்தது.

களவு தெறித் திருமணம்

இதில் களவு என்பது திருட்டு அல்ல. காதலிப்பதை பெற்றோர், மற்றோர் அறியாது மறைத்து சமயம் வரும் போது வெளிப்பட்டு பெற்றோர் சம்மதத்துடன் மணப்பதும் உண்டு. காதலியை, காதலன் கவர்ந்து செல்வதும் உண்டு. இதற்கு இலக்கணத்தில் உடன்போக்கு என்று பெயர். ஓடியவர்களை தேடிக்கண்டு திருமணம் செய்விப்பதும் உண்டு. முருகன் வள்ளியை கவர்ந்து சென்றுவிட்டான். வளர்த்த வேடுவர் தேடிக்கொண்டு போரிட்டு மாண்டனர். கருணை வள்ளல் முருகன் வள்ளியை விட்டே இறந்தவர்களை எழுப்பச் செய்தான். எழுந்த வேடுவர்கள் முருகனை கண்டு பணிந்தனர். மகிழ்வோடு வள்ளித்திருமணம் முடித்தனர்!

ஜீவாத்மா, பரமாத்மா

வள்ளிதான் ஜீவாத்மா. ஜீவாத்மா பரம்பொருளை உணர்ந்து கொள்ளாமல் மயக்கத்திலிருந்து பிரணவ சொரூபியான விநாயகர் யானையாக இடையில் வந்தார். ஜீவாத்மா வள்ளியை பரமாத்மாமுருகனிடம் சேர்த்து வைத்தார் என்பதே வள்ளித்திருமணம் என்பதும் ஓர் தத்துவமாகும்.



சேய்த்.தொண்டர்மாமணி
எம்.எஸ்.சுப்பிரமணியன்

Saivism

Sishya: Pranamji Could you, please, delineate the importance of recording the above inscription at arrur (as a triplicate copy) in other temples, Sir?

Guru : It is noteworthy that this inscription, which was recorded as a duplicate copy on the walls of the Mukthiswara temple at Arrur, was also ordered to be recorded (as a triplicate copy) on the walls of the temple of Udaiyar Thiruvekambam Udaiya Nayanar (meaning the Ekambaranatha temple at Kanchipuram)- a part from the master copy on the walls of the temple at Chidhambaram itself A.R.E.463 of 1902).

Sishya: Could you, please, delineate the Thripuranthakam inscriptions,Sir?

Guru : Much light is shed on the achievements of Kopperunjinga by an undated Grantha inscription of this ruler engraved on the northern wall of the kitchen in the temple of Thripuranthakam, a place in the Markapur taluq in Kurnool district of Andhra Pradesh (S.I.I.XII,247; also A.R.E. 198 of 1905.)

It eulogises the King, called here Maharajasimha, son of Jiyamahipathi and Queen Silavathi. The record describes him as a devotee at the feet of the God at Chidhambaram and goes on to mention that he built the East Gopuram, resembling Mount Meru, from the riches obtained in the conquests over his enemies and called it after his own name.

The decorations on the four sides of the Gopuram are said to have been made with the booty acquired by subduing the four quarters and riches used in thularohana ceremony. The details of raising of the East Gopuram are given in the verses which are summarized below:

He raised the East Gopuram as one with

seven tiers(Saptha – thala—gopuram); he decorated the sourthern part with the booty gathered in his campaigns against the Kamatha region. The northern part of the tower was decorated with the booty collected from Andhra Pradesh campaign.He called Natarajah or Thiru-Chitrambalam Udaiyar by the appellation 'Dabhra- Sabha-pathi'.

There is another inscription of Kopperunjinga, at Draksharama in Andhra Pradesh, which is dated in Saka 1184 (A.D.1262); and a reference to the benefactions at Draksharama is made in this record from Thirupuranthakam, thus providing bottom line of A.D.1262 as the date for the Thrupuranthakam inscription.

Thus, the renovation and decoration of the East Gopuram must have been brought about that year, which corresponds to the 19th reginant year of this Pallava Chief.

Sishya: Could you, please, delineate the revival of Pandyan throne at Madurai in A.D. 1216, Sir?
Guru : In about A.D.1216, there came to the Pandyan throne of Madurai, Maravarman Sundara Pandya I, the founder of the revival of Second Empire of the Pandyas.

Sishya: Could you, please, explain the achievements of Maravarman Sundara pandya I (A.D.1216-41), Sir?

Guru : In order to avenge the humiliation inflicted earlier by the Chola emperor, Kulotthunga III, on him and on his elder brother at Madurai, Maravarman Sundara Pandya I invaded the Chola Country soon after his accession; set fire to Uraiyur and Thanjavur, and sacked and plundereded the land.

After performing a Virabhishek in the coronation hall in the palace of the Cholas at Ayirattali (alias Palaiyarai, near Kumbakonam), one of Chola Capitals, he reached the holy Puliyur of Thillai Andhanar (the 'Three Thousand of Thillai') fame and offered worship to the Lord of Ponnambalam-''the one whose effulgence and glory could not be perceived by Brahma or Vishnu''

"ஐயப்படாத அருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வப் புலியூர் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய ஆடுவர் பூவையுடன்
மன்னு திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மே லயனும் குளிர்துழாய்
மாலு மறியா மலர்ச்சே வடிவணங்கி".

- மாறவர்மன் சுந்தரபாண்டியன் I மெய்க்கீர்த்தி.

After acknowledging the submission of, and as a gesture of royal magnanimity restoring the kingdom to, the Chola King at Pon Amaravathi, he returned to Madurai. He is, therefore, known as 'Conadu Kondu Conadu Valangiya Sundara Pandyan'.

Sishya: Could you, please, delineate the valour and achievements of Maravarman Vikrama Pandya II (A.D.1250-65),Sir?

Guru : Maravarman Vikrama Pandya II alias Bhuvanaika Vira was a great warrior. He is described as ' the sun to the dense darkness of the Kerala race, the sub-marine fire to the Chola race, the consuming fire to the Kathaka and ' poison to the lord of Lanka', also' a terror to Vira Ganda Goplala' and the 'Kuttapekala fever to the mad elephant (Ganapathi, the Kakatiya ruler).

He is said to have performed an anoinment Ceremony at Kanchipuram. His victories are eulogized in beautiful Tamil verses engraved on the East and West gopurams of the Chidhambaram temple. These victories were over the Venadu king at Podiyil and over the kakathiya ruler, Ganapathi.

Sishya: Could you,please, delineate the reason why Maravarman Vikrama Paniya II did not invade the north further,Sir?

Guru : Maravarman Vikrama Pandya II did not pursue the conquests further north, they say, since a woman with a man's name

was ruling there then- the reference being to Rudhramba, the daughter-Successor of Kakatitya ruler, Ganapathi, ruling under the name of Ruthradeva Maharaja (A.R.E.365 of 1919).

Sishya: Could you, please, delineate the prasastis of Vikrama Pandya and his co-ruler Jatavarman Kula Sekhara, Sir?

Guru : Vikrama Pandya's prasastis begin with 'Samastha bhuvanaika Vira' and' thiru malar madu'. He had as senior co-ruler Jatavarman Kulasekhera (A.D.1237-58), whose prasastis commenced with 'Bhutala vanithai' and whose natal star was Vishalam, and as junior co-ruler Jatavarman Sundara Panya I, whose 'brinda' and Samastha Jagadhirura.'

Sishya: Could you, please, delineate thr endowment made by Araiyan Priyanayan alias Gangayarayan of Enadi Merkkudi in Thirukkaluma nadu,Sir?

Guru : An inscription (A.R.E.150 of 1961-62) of the 6th reignant year of this ruler (24th March, 1255 A.D.) refers to an earlier endowment originally made by one Araiyan Priyanayan alias Gangayarayan of Enadi Merkkudi inThirukkaluma nadu for the supply of plaintain fruits to the Natarajah temple, the land was 500 Velis in extent and had been made tax-free , it appears that this land was inadvertently taxed at a subsequent date,resulting in a reduced supply of fruits to the temple. The order makes the land once again tax-free and the Mahasabha of Sri Viranarayanam alias Sundara Pandya Chadhurvedhimangalam agreed to supply a specified number of fruits for daily use and at the times of various festivals, to the temple of Thiru- Chitrambalam Udaiyar.

Sishya: Could you, please, delineate the battles near Chidhamabaram and at Vellaru, Sir?

Guru : One inscription of six verses in Tamil (A.R.E.329 0f 1913) refers to a battle near Chidhambaram between Valavan (Chola) and the Minavar (Panndya),and in another (A.R.E.336 0f 1913), mention is made of a battle that was fought by Bhuvunaika Vira on the banks of nearby Vellaru (lit. a white river), which turned into a 'sevvaru" (a red river) – so bloody was the battle. After his victory in this battle, he witnessed the Dance of the Lord at Puliyur. The verses run as follows:

சீர்கொண்ட வெள்ளாறு குருதி பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாறு சென்றப்
போர் வென் றுணப்பேய் நடங்கண் டதற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா!

மீனவற்கு விக்கிரம பாண்டியற்கு வேந்தரிடும்
யானை திருவுள்ளத் தேறுமோ தானவரை
வென்றதல்ல மேனிநிறம் வெள்ளையல்ல செங்கனரக்
குன்றதல்ல நா ல்ல கோடு.

வெங்கண் மதயானை விக்கிரமே பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே அங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணொன்றும் வேய்வாய் பகை".

The surname of 'Bhuvanaika Vira' is borne today by the town of Bhuvanagiri on the banks of the veìlar river, 6 Kms. northwest of Chidhambaram, known to history since his days as Bhuvanaika Viran Pattinam, presumably in commemoration of his great Victory on the Vellaru banks.

சிவபேரிகை.

ம.பெரியசாமி

அன்பு
அறிவு
அருள்ஒளி

திருமூலர் திருவடிகளே சரணம்

உழைப்போம்
சேர்ப்போம்
கொடுப்போம்

அகிலமும் அருள் ஒளி நிறையட்டும்
தொண்டு செய்து இன்பம் காண்போபம்
வாழ்ந்து வழிகாட்டியவர்களை வணங்குவோம்
முதல் குருவாம் தாய் தந்தையரை
வணங்குவோம்
ஞானகுரு வழிநின்று அருள்நிலை பெறுவோம்

இவ்வுலகம் பஞ்சபூத தத்துவத்தோடு இயங்குகிறது என்பதை நாம் அறிவோம். ஒரு பொருள் உருவாக பஞ்சபூத நிலை வெளிபாடு தேவை என்பதையும் அறிவோம். ஆனால் மறைந்து நின்ற பூதங்களை அதாவது நீர் நெருப்பு காற்று இல்லாது ஒரு பொருள் திடநிலையை பெற முடியாது என்பதை நாம் உணர வேண்டும் இந்த பூமி நீர்நெருப்பு காற்று என்ற பூதங்களை உள்ளடக்கி நிலைத்து நிற்கின்றது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும் அதுபோன்றே நம் உடலானது பூமி தத்துவத்தோடு நின்று, நம்முடலிலே நீர் நெருப்பு காற்று என்ற மும்மூல தத்துவத்தோடு நிலை பெற்று மறைந்து நின்று நம்மை காத்து வருகின்றன, என்பதை உணர வேண்டும்.

இதையே மேல்நாட்டார் நீயூட்ரான், எலக்ட்ரான், புரோட்டான் என்றும், நம் மகான்கள் நீர், நெருப்பு காற்று என்றும், பிரம்மா விஷ்ணு, ருத்திரன் என்றும், லெட்சுமி சரசுவதி பார்வதி என்றும், தட்சாம நிலைகளை நமக்கு உணர்த்தி நம்மை வழி நடத்தியிருக்கிறார்கள். இதுவே நம்முடலிலே வாதபித்த கபமாக நிலைபெற்று, நம்மை காலவரையில் நின்று வாழ வைத்துக்கொண்டு இருக்கின்றது. இந்த அணு தத்துவத்தோடு நம் உடல் இயங்கி கொண்டு இருக்கிறது.

மேற்கண்ட அணு தத்துவம் இவ்வுலகம் தோன்றிய முன்னும் இவ்வுலகம் அழிந்த பின்னும் நின்று, என்றும் நிலைபெற்று, இவ்வுலக, தோற்ற ஒழுக்கத்தை செயல்படுத்தி கொண்டு நிற்கின்ற நம் இறைவனை உணர்ந்து, மறைந்து நின்று அருள்புரியும் பேரருளை நாம் வணங்கி, நம் உள்ளத்திலே நிலை நிறுத்த என்றும் நமக்கு வழி துணையாக வந்து அருள்புரிவான்.

இவ்வுலகம் அமைதி பெற ஒன்றுபடுவோம்

திருமந்திரம் – பாடல் 28

வழிதுணையாக வருவான்

இணங்கி நின்றான் எங்குமாகி நின்றானும்
பிணங்கி நின்றான் பின்முன் ஆகிநின்றானும்
உணங்கி நின்றான் அமராபதி நாதன்
வணங்கி நின்றார்க்கே வழித்துணை யாமே.

சித்தர்.
ஐயா, பழனியப்ப சுவாமி

நிறுவனர்:
சித்தர் குடில் அகநிலை
அருள்ஒளி சபை

கவிப் பேராசான்
கருமாரிதாசருக்கு கவிதாஞ்சலி!



ஏதென் றெழுவே னென் றெழுதுவேன்
ஏத மிலாரை இறை உளாரை
தீதொன்று மிலார்யா தொன்றுமிலார்
தோதென் றொழுதேத்துமுமடியை
வாதொன்றும் வாராது காத் தருளும்
வண்ணம் எண்ணம் வைப்பேனும் அடியில்
மாதொருபாகன் மதிசூடிய பெம்மான் மகன்
சூதறுத்த சுப்பிரமணியரடி பணிந்தே... 1

கவிகாளமேகம் கருமாரி தாசராகி
புவிவாழ புதல்வன்முருகன் பாகனாகி
அவித்திட்டு ஆசைகள் தவிர்த்திட்டு
அன்றாடும் நின்றாடும் தண்டாயுதபாணியை
குவித்திட்டு கரம் தீட்டிடும் கவிதைகள்
ஏட்டினை அருள் பாட்டினை
செவியுற்று சுவைபெற்று சுகமிட்டேன்
சுவாமிகள் அருள் அமுதம் பெற்றேனே! 2

பொய்வழி போகாது மெய்வழியேக
உய்யும்வழி யொன்றுள தென்று
பைந்தமிழரசு பாம்பனார் வழிநீள
செய்யுமொழியாதும் செம்மை மொழியாக
வையமுள்ளவரை வாழ்ந்திடும் தலைமகனார்
தெய்வத் திருகவிகள் கோடியாக
பையவே அவர்பாதம் பணிந்து பணிந்து
யேத்தி காத்திட வேண்டுமென வரம்
கேட்கவே 3

உமது பெரும்புகழ் சொல்ல மெல்ல
எழுதுகோல் எடுத்தேனய்யா
தமதென்று ஒன்றுமலை தரணியிலே
தந்ததெலாம் பரமென்று வைத்தீர்
சென்னியிலே
பவமென்று வந்ததும் சிவமொன்று தந்ததும்
தவமுடித்து சுபமுடித்தீர் மண்ணிலே
அவமென்று உள்ளதை அண்டிடாதிருந்து
ஆறுமுகம் கரம் பிடித்தீர் விண்ணிலே... 4

அருளும் அன்பறிவும் செறிவும்
ஆன்ற மொழிக் குன்றுமாய் பண்ணிலே
பொருளே! பரம்பொருள்என்றிருந்துமை
காணாது துயர்கொண்டேன் கண்ணிலே
இருப்பினும் சிறப்பினும் உம்மருளால்
கவிதைகள் கோடி உளவே
பொருக்கினும் உமது ஆழ்நிலையுலகில்
எமக்கருள் பெறல் அன்பே! 5

தந்த மூச்சும் வந்த மூச்சும்
சொந்த மூச்சிலையெனும் சரவணபவமே
எந்தன் பேச்சும் என திலையெனும்
ஆகும்; அன்பே சிவமே
எடுத்துச் செல்லல் ஏதுமிலையென உணர்ந்த
அறிவேயாகும்; சுகமே
தொடுத்திட்டு தொகுத்திட்டு அமைதியே
ஆகும் ஆனந்த மயமே 6

ஈந்ததெலா மிறையீந்த இலவசமென
உணரின் ஏகாந்தம் வருமே
சாந்தமுறும் மனமும் சக்திபெறும் குணமும்
சார்ந்தோமெனில் பிறவியறுமே
ஈந்தோமென்று இவ்வுலக வாழ்வமைந்தால்
தாம் ஒமெனும் சுகம் தருமே
தீந்தமிழ் தினமோதி தெய்வீகம் பெறின்
வானுலகர் வாழ்வு வளமே

இனியது இருபது மேலாம் இறையருள்
இயற்றிய இனியமுது நூலாம்
கனியமனம் கறுத்த மாயை அறுத்
தருளிய அற்புத நூலாம்
பனித்துளி பானொளி நுழைந்து குழைந்து
மாரியென மாறிய அருள் நூலாம்
அணியணியாய் அள்ளியீந்த கவியில்
பிழைநிலை பேதமை ஒழிந்த நூல்களே! 8

கருமாரி கவசம் காஞ்சி முனி பிள்ளைத்தமிழ்
ஒருணர் ஒர்த்த உன்னத வடிவும்
பெருவாரி சேர்த்த அந்தாதி அனுபூதி
அலங்கார சதக ஊஞ்சலழகும்
குருவாரியா யீர்த்த ஆதிசங்கரர் அருணகிரிநாதர்
ஒப்பிலாவுயர் அப்பாவு பிள்ளைத்தமிழும்
ஒருபோதும் உம்மிணை உம்துணை பெருபோதமாம்
இருதிருவடி குருவடி சரணே 9

மொழியொன்றும் விழியிரண்டும் பழிமூன்றும்
வழிநான்குமற வரம்தரும் திருச்சுழிதானே
பூதமைந்தும் நல்லறிவாறும் எழும்பிறவியேழும்
எண்சாண் உடலுயிரும் தரம்தர திருஏர்
ஊர்தானே
கோளென்பதும் நாள்மாதம் பத்தும் அத்தின்
அத்துவித சுத்தாந்த சித்தாந்தம் தானே
உமையொத்த கவிஎமையாண்டு இனிது சமைத்திட
யேங்கும் எனதுளம் தானே 10

17/62017 அன்று சென்னையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் பாடிய இரங்கற்பா

பக்தியுடன் கவி.மு.கண்ணன்

குமரகுருபரர் சுவாமிகள் அருளிய சகலகலாவல்லி மாலை

வெண் டாமரைக்கு அன்றி நின் பதம் தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்அமுதார்ந்து உன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும் கொலோ உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியும் சொற் சுவைநோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

4

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாதம் பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத்தவி சொத்திருந்தாய் சகல கலாவல்லியே.

5

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளிது எய்த நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

6

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

7

சொல்விற் பனமும் அவதான முங்கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிது என்றொரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே சகல கலாவல்லியே

8

சொற்கும் பொருட்கும் உயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே. 10

நுவலரும் கருமாரிதாசர்!

17/6/2017 அன்று சென்னையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் பாடிய இரங்கற்பா

நலமெல்லாம் வழங்கப்பெற்ற
நற்கருணீக ரெனுமோர்
குலமெலாம் விளங்கவைத்துக்
குலவிய வடலூர் வள்ளல்
உளமெலாம் அவரைப் போற்ற
உரையெல்லாம் பாம்பன் பாடல்
தரை யெல்லாம் மகிழத் தந்த
தருவினைப் பெற்றிழந்தோம் 1

பாடலோர் இலக்கம் பாடும்
பாங்கினைப் பெற்றிருந்தும்
நாடெலாம் வியக்கும் வண்ணம்
நாவன்மை பெற்றிருந்தும்
ஏடெலாம் மணக்குந் தமிழின்
எல்லையைத் தொட்டிருந்தும்
பீடெலாம் எண்ணா துலவும்
பித்தனைப் போல வாழ்ந்தார் 2

தாமரை இலையைத் தண்ணீர்
தழுவிடா திருப்பதைப் போல்
பூ மணப்பிள்ளை பெண்டிர்
புகலரும் சுற்றம் வேண்டார்
பாமனப் பாம்பன் குருவின்
பாதமே துணையாய்க் கொண்டு
காவெலாம் பொலியும் அன்னை
கருமாரி அருளைப் பெற்றார் 3

ஈரோடை தங்கும் ஊராய்
எழிலன்னை கோயில் வீடாம்
நாடோறும் நண்ணும் அன்பர்
நலமெலாம் இவரின் நலமாம்
வீறோடு துறவை ஏற்ற
வேந்தரின் வாழ்க்கை எல்லாம்
தாரோடு விளையும் வாழை
தரும்பயன் நிகர்த்த தன்றோ? 4

சேக்கிழார் போலத் தோற்றம்
செந்தமிழ் சுரக்கும் ஊற்றம்
வாக்கினில் பாம்பன் பனுவல்
வாரியாய்ப் பொங்கும் ஏற்றம்
தேக்கெனப் பொலிந்து தோன்றும்
திடவுடல் வீழ்ந்த போதும்
நோக்கினில் மறையா ரெங்கள்
நுவலரும் தாசர் மன்னோ 5

ஓவியப் பாவலர்

மு.வலவன், எம்.ஏ.பீ.எட

அன்னதானமும் ஓம்சிவசிவஓம் மந்திர ஜபமும்

திண்டிவனம் வட்டம், கீழ்பசார் சந்திரமௌலீஸ்வரர் கோயில் தமிழ்நாட்டில் இருக்கும் மிக பழமை வாய்ந்த கோயிலாகும். இந்த கோயில் சுமார் 1000 ஆண்டுகள் பழமையானது என நம்பபடுகிறது.

பௌர்ணமி அன்று பக்தர்கள் கிரிவலம் வருவது பழக்கமாகவும் புண்ணியமாகவும் கருதப்படுகிறது. கீழ்பசார் சந்திரமௌலீஸ்வரர் கோயில் சென்று கிரிவலம் செல்லும்போது, மனதுக்குள் ஓம்சிவசிவஓம் என்று ஜபித்துக்கொண்டே செல்ல வேண்டும்.

அவ்வாறு கிரிவலம் செல்லும்போது, வசதியிருந்தால் குறைந்தது ஒன்பது பேர்களுக்கு அன்னதானம் செய்யலாம்; (அன்னதானத்திட்கு தேவையான அரிசி, பருப்பு, காய்கறிகள் போன்றவற்றை அளிக்க கூடியவர்கள் பொருளாக கூட அளிக்குமாறு கேட்கிறோம்.)

இவ்வாறு 3 முறை வலம் வந்தால் நமது கடுமையான கர்மவினைகள் தீரும்.

கிரிவலம் முடித்த பின்னர், கீழ்பசார் சந்திரமௌலீஸ்வரர் தரிசனம் செய்ய வேண்டும்.

இப்படி மாதம் 3 முறை வீதம் குறைந்தது 1 ஆண்டு வரையிலும்,அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரையிலும் அன்னதானம் செய்து கொண்டே கிரிவலம் செல்ல வேண்டும்;

அப்படி கிரிவலம் செல்லும்போது ஓம்சிவசிவஓம் ஜபிக்க வேண்டும்.

பல்வேறு காரணங்களால்,நாம் கோபம், பொறாமை, திமிர், அகங்காரம், செல்வச்செருக்கு போன்றவற்றினால் பல பிறவிகளிலும், இந்த பிறவியிலும் ஆடாத ஆட்டம் ஆடியிருப்போம்; அவை அனைத்தும் இவ்வாறு 3 ஆண்டுகள் வரையிலும் அன்னதானம் + ஓம்சிவசிவஓம் ஜபித்தவாறு கிரிவலம் செல்லுதல் மூலமாக அனைத்துக் கர்மவினைகளும் தீர்ந்துவிடும்.

இந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு தடவையும் இவ்வாறு செய்ய செய்ய நாம் நமது சிந்தனை,செயல்,அணுகுமுறை என அனைத்தும் மாறியிருக்கும்.

மேலும், இவ்விடத்தில் கோவில் திருப்பணி நல்லவண்ணம் நடைபெற எம்பெருமான் திருவடிகளை வேண்டுவோம்
மனதில் நினைத்தாலே பல தலைமுறைகளுக்குப் புண்ணிய பலன்களை அளிக்கக் கூடிய இம்மாபெரும் திருப்பணியை விரைவில் முடித்து மன்னர்கால மகோன்னத நிலையை மீண்டும் இத்திருக்கோயில் அடைந்திட அயராது பாடுபட்டு வருகின்றனர்.

இந்த நல்லதோர் வாய்ப்பினை நமக்கு அருளிய எம்பெருமானின் திருவடிகளை வணங்கி, இத்திருப்பணியில் உயிர்கள் அனைவரும் இணைந்து திருவருளை பெற வேண்டுமாய் வேண்டுகிறோம்

-திருமந்திரத்திரு.
வெங்கடபதி

பயனற்றவை எவை?

ஒவ்வொரு தனி மனிதனும் தத்தம் வாழ்க்கையில் இலாபகரமான முறையில் வாழவும், இகபர சௌபாக்கியங்களைப் பெற்று வளமாக வாழவும் வழிகாட்டுவன அற இலக்கியங்கள், இவ்விலக்கியங்கள், வாழ்க்கையில் அன்றாடம் பின்பற்றக் கூடிய நற்செயல்களைப் புகட்டுகின்றன. ஒருவர் தம் வாழ்வில் பின்பற்றக்கூடிய அறச்செயல்கள் எவை? பின்பற்றக் கூடாத பயனற்றச் செயல்கள் எவை? என்று அறிதல் அவசியமாகிறது. பயனற்றவை எவை? என்பதைத் திருக்குறள், விவேக சிந்தாமணி, கயிலாச நாதர் சதகம் போன்ற நூல்களின் வழி அறிய முடிகிறது.

விவேக சிந்தாமணி என்னும் அறநூல் பயனற்றவை எவை? என்று பட்டியிலிட்டுக் காட்டுகிறது. அதாவது, துன்பப்படும் போது பெற்றவருக்கு உதவாத பிள்ளையும், நல்ல பசி நேரத்தில் கிடைக்காத உணவும், நீர் வேட்கையை நீக்காத தண்ணீரும், வறுமைநிலை அறிந்து குடும்பம் நடத்தத் தெரியாத பெண்ணும், கோபத்தை அடக்காத வேந்தனும், குரு கூறிய அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்காத மாணவனும், பாவம் போக்கும் புனிதத் தன்மையில்லாத புண்ணிய தீர்த்தமும் ஆகிய ஏழும் பயனற்றவை என்று கூறுகின்றது.

"ஆபத்துக்கு உதவாப் பிள்ளை,
அரும்பசிக்கு உதவா அனனம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழும் தானே"

இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களை மிதியாத அடியும், சிவபெருமானின் திருவடியை வணங்காத தலையும், வறியராக வந்து யாசிப்பவர்க்கு பொருளை அளிக்காத கைகளும், அறமுடைய இனிய சொற்களைக் கேளாத செவிகளும், தம்மைப் பாதுகாப்பவர் கண்ணீர் விடும்படி சாகாத உடலும் இருப்பதால் என்ன பயன்? சுடுகாட்டில் எரித்தாலும் பயன் ஒன்றுமில்லை என்று விவேக சிந்தாமணி மேலும் குறிப்பிடுகின்றது.

"திருப்பதி மிதியாப் பாதம்
சிவனடி வணங்காச் சென்னி
இரப்பவர்க்கு ஈயாக் கைகள்
இனியசொல் கேளாக்காது
புரப்பவர் தங்கள் கண்ணீர்
பொழிதரச் சாகா தேகம்
இருப்பினும் பயன்என்? காட்டில்
எரிப்பினும் இல்லை தானே"

இறைவன் திருவடியை வணங்காத தலைகள்; கொள்கை இல்லாத பொறிகள் போலப் பயனற்றன என்பர் திருவள்ளுவரும்,

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (குறள்-9)

வாழ்க்கைக்கு தேவையான பயனுடைய சொற்களைக் கேட்க வேண்டும். அங்ஙனம் கேளாத காதுகள், கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் என்றும், செவியான் நுகரபடுஞ் சுவைகளை உணராத வாய் உணர வினையுடைய மாந்தர் என்றும், சாவினும், வாழினும் என்ன? என்றும் வெகுண்டு மேம் குறட்பாக்கள் ஈண்டுக் குறிக்கதக்கவையாம்.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி" (குறள் - 418)

செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்" (குறள்-420)

தம்மைப் பாதுகாப்பவர் கண்ணீர் விடும்படி சாவப்பெறின். அச்சாக்காடு இரந்தாயினும் கொள்ள வேண்டும் என்பார் வள்ளுவப் பேராசான்.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து" (குறள்-780)

எனும் குறட்பா இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாம். சிதம்பர வாணன் சுவாமிகள் அருளிய 'கயிலாச நாதர் சதகம்' என்னும் சிற்றிலக்கியம் பயனற்றவை எவை? என்று வரிசைப்படுத்துகிறது.

இரவலர்க்கு உதவி புரியாத செல்வம், சந்திரன் இல்லாத வானம், இனிய இசையும், பொருட் செறிவும் இல்லாத பாடல், இரக்க உணர்வு இல்லாத மனம், வணக்கம் இல்லாத புத்திரர், மனைவி இல்லாத இல்லற வாழ்க்கை, குதிரை இல்லாத படை, வேதங்களை ஓதுதல் இல்லாத வேள்வி, பூக்கள் இல்லாத சோலை, குழந்தைகள் இல்லாத இல்லம், அமைச்சர் இல்லாத அரசாங்கம், புகழ்மிக்க செயல்களைப் புரியாத தேகம் (உடல்), செல்வச் செழிப்பு இல்லாத இளமை வாழ்வு. கவிஞர் இல்லாத சபை, செங்கோலாட்சி இல்லாத நாடு, தியானம் செய்து மேன்மையடைாத செபம், ஆலயம் இல்லாத ஊர், வீர உணர்வில்லாத சேனை (படை), கை, கால் இல்லாத உடல், அழகில்லாத சித்திரம் ஆகியயாவும் பயனற்றவை என்பதாம்.

"இரவலர்க்கு உதவாத நிதி, மதியிலா வானம்,
இசை பொருள் இலாத பாடல்,
இரக்கமில்லாத மனது, வணக்கமில்லாத மதலை
ஏந்திழை யிலாஇல் வாழ்க்கை
புரவியில்லாத படை, சதுர்மறையிலா வேள்வி,
புஷ்பமில்லாத சோலை,
புத்திரர் இலாதமனை, மந்திரி இலா அரசு,
புகழ்படைக்காத உடலம்,
திரவியம் இலா இளமை, கவிஞர் இல்லாத சபை,
செங்கோல் இலாத நாடு,
தியானம் இல்லாத செபம், ஆலயம் இலாதவூர்
தீரம் இல்லாத சேனை
கரங்கால் இலாததநு, கவினிலாச் சித்திரமாம்
கற்பக விராசமேவும்
கங்கைபுனை ஈசனே மங்கைமகிழ நேசனே
கயிலையங் கிரிவாசனே"

எனும் நெடும்பாடல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. 'மனைக்கு விளக்கம் மடவாள்' என்பது நான்மணிக்கடிகை. அறவோர்க்கு உணவு அளிக்கவும், அந்தணர்களை ஓம்பவும், விருந்தினரை உபசரிக்கவும், வீட்டில் விளக்கேற்றவும், இல்லாள் (மனைவி) தேவை. இல்லாள் என்றால் 'இல்லத்தை ஆள்பவள்' என்பது பொருள். மனையாள் என்றால் மனைமாட்சி செய்யம் மாண்புடைய மனைவி என்பது பொருள். இருந்தோம்பி இல்வாழ்வதற்கு வாழ்க்கைத் துணைவி அவசியம் என்பது கருத்து. மனைவிக்கு நல்ல அணிகலன், மக்கட்பேறு உடையதாய் இருத்தல் வேண்டும் என்பார் முப்பால் தந்த முனிவர்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட்பேறு" (குறள் -60)

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா"
என்பர் உலக நாதனார் (உலகநீதி)

சந்திரன் இல்லாத வானம், தாமரை இல்லாத நீர்நிலை, அமைச்சர் இல்லாத அரசவை, யானை இல்லாத போர்ப்படை, கல்வி, கேள்விகளில் சிறந்த சான்றோர் இல்லாத சபை, பிள்ளை இல்லாத வாழ்க்கை மீட்டத் தந்திகள் இல்லாத வீணை, தனம் இல்லாத பெண் போல பயனற்றது என்ற செய்திகளை விவேக சிந்தாமணி விளக்கிக்கூறும்.

"சந்திரன் இல்லா வானம், தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன் மதகரி இல்லாச் சேனை
சுந்தரப் புலவர் இல்லாத் தொல்சபை, சுதர் இல்லாத
வாழ்வு
தந்திகள் இல்லா வீணை தனம்இல்லா மங்கை
போலாம்"

எனும் பாடல் இவண் ஒப்பிடலாம்.

உயிர்க்கு ஊதியம், பயனுள்ள செயல்களைச் செய்து அதன்வழியில் வாழ்வதாகும். தமக்கும், பிறர்க்கும் நன்மை விளைகின்ற நற்செயல்களையே செய்ய வேண்டும். பயனில் சொல்லைச் சொல்லாமலும், அவமே காலத்தைப் போக்காமலும் பயனுடைய வாழ்க்கையை வாழ வேண்டும். இதுவே நல்லோர் காட்டும் நன்னெறி, செல்வம் பெற்றவர்கள், வறியவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். இதுவே பயனுடைய வாழ்க்கை இங்ஙனமின்றி வாழ்தல் பயனற்றதாகும். பயனுடைய வாழ்க்கை வாழ வேண்டுமானால், அருள் உணர்வோடு அறவழியில் செல்ல வேண்டும் என்பதாகும். திருக்கோயில்களைத்த தேடிச் சென்று தொழ வேண்டும். இதுவே மனித உடல் தாங்கியதன் பெரும் பயனாகும்.

க.கலாநிதி,
எம்.ஏ, எம்ஃபில், பி.எட்.,
அரிவஞ்சூர்

மயூரபுரத்தமர்ந்த குருவே!

திருநீற்று நெறியோங்கிச் சிவசமயம் தழைக்க
சீர் சிறக்கும் ஞாலமெலாம் பல்வளமும் ஓங்க
திருமுறையும் ஆகமமும் வேதநெறி பரவி
திருவுயர்ந்த ஆறெழுத்தான் அருளாட்சி பெருக
கருணைநெறித் தத்துவத்தால் காசினியே உய்ய
கந்தபிரான் செவ்வேளை முழு முதலென் றுணர்த்தி
திருமணியாய்க் குமரகுரு தாசனென வாகி
திருவான்மி யூர்மயூர புரத்தமர்ந்த குருவே! 1

உண்முகமாய் நோக்கியொளி உள்ளத்தைக் கண்டே
உலகமெலாம் இன்புற்று வாழ வழி வகுத்து
சண்முகமாக் கவசத்தைக் தந்தபெரு வள்ளல்
தற்பரனாய் தவமணியாய் தயாநிதியாய் ஓங்கி
எண்டிசையும் புகழ்ந்தேத்தும் முருகனருள் விளக்கி
எங்கெங்கும் திருநீற்று நெறியோங்கச் செய்தான்
தண்டமிழும் வேதமுடன் ஆகமமும் தழைக்கும்
திருவான்மியூர்மயூர புரத்தமர்ந்த குருவே! 2

ஐங்கரனும் அறுமுகனும் சிவசக்தி ஒன்றே
அத்துவித தத்துமென்றாய்ந்துணர்ந்து கண்டான்
மங்களமே மிகுந்தோங்கும் பாம்பன்பதி வசித்தான்
மாதவத்தைப் பிரப்பன்வல சைப்பதியில் புரிந்தான்
துங்கமுறும் வாரணாசிப் பதினிலே துறவு
தூயநெறிக் காவியச் செவ்வாடை தனைத் தரித்தான்
திங்களணிச் சடையானின் திருத்தலமாய்ச் செழிக்கும்
திருவான்மி யூர்மயூர புரத்தமர்ந்த குருவே! 3

வான்மீகி முனிவரனார் சிவபூசை செய்தே
வழிபட்டு வரம்பெற்று வளம்பலவும் பெருக்கி
வான்மீகி தவபலத்தால் மகிமைமிகும் மூதூர்
வானவரும் முனிவரும் வந்து போற்றும் சீரூர்
தேன்மொழியாம் திருப்புகழின் பாடல்பல பெற்றும்
தேவாரப் பாடலாலே சீர்மையிலே செழிக்கும்
தேன்சிந்தும் மலர்ப்பொழில்சூழ் திருத்தலமாய் ஓங்கும்
திருவான்மி யூர்மயூர புரத்தமர்ந்த குருவே! 4

எண்கண்ணன் எட்டெழுத்தன் இமையோரும் வாழ்த்த
எண்குணத்தன் இருசெவியில் பிரணவத்தைக் கேட்க
தண்டமிழால் நக்கீரன் அருணகிரி போற்றும்
சந்தத்தைக் கேட்டுமகிழ் கந்தபிரான் நேர்த்தி
மண்டுபுகழ் மாமுனிவர் சித்தரெலாம் புகழும்
மாஞான பூமியெனத் திகழ்கின்ற மூதூர்
திண்ணமுறும் பத்திநெறி யாளர்நிறை பதியாம்
திருவான்மி யூர்மயூர புரத்தமர்ந்த குருவே 5

மயூரபுரம் என்றொருகால் மனமகிழ்ந்து மொழிந்தால்
மாஞானம் கூடி நிற்கும் வாய்மையிது சொன்னேன்
மயூரபுரம் திருத்தலத்தைக் கேட்டவர்தீ வினைகள்
வந்தவழி பார்த்தோடும் சத்தியவா சகமே
மயூரபுரம் பெரும்பதியைக் கண்டுணர்ந்து போற்றி
வழிபட்டார் எண்ணங்கள் கைகூடும் சரதம்
மயூரபுரம் மாட்சியினைக் கற்றார்கள் என்றும்
மாதவத்தின் பெரும்பயனை முழுவதுமாய்ப்
பெறுவார். 6

பாம்பனார்
பைந்தமிழரசு
ஸ்ரீலஸ்ரீ
கருமாரிதாசர்

திருவரை கிண்கிணி ஓசை...



முருகப்பெருமான் சிரசு முதல் பாதம் வரை பல்வேறு அணிகலன் அழகு செய்கின்றன. ஒவ்வொரு அணிகலனும் ஒருவகையில் சிறப்பு பெறும் முருகப்பெருமான் குழந்தையானதால் அருணகிரிநாதர் அவனது இடுப்பில் அணிந்துள்ள திருவரையிலுள்ள ஆபரணத்தை (அரைஞான கயிறு) உற்று நோக்குகிறார். வரிசையாக மணிகள் கட்டியுள்ள அந்த ஆபரணத்தை பாபர்த்து பரவசப்படுகிறார்.

அருணகிரிநாத சுவாமிகள் மணிகள் எழுப்பும் ஓசை, கிண்கிணி எனும் சப்தம் சுவாமிகளது திருச்செவியில் விழுகிறது. இந்த ஓசை எந்த விளைவை முன்பு ஏற்படுத்தியது என்பதை பதிவு செய்ய எண்ணுகிறார். ஆம்! இந்த கிண்கிணி ஓசை ஒலித்த அளவில்,

அசுரர் கூட்டம் திடுக்கிட்டன,
அஞ்சி நடுங்கின
எட்டு திசைகளிலுள்ளவரும் செவிடாயினர்
மலைகள் எட்டினொடு பொன்மலையாம், மேருசிரியும்
அடியற்று விழுந்தது.

இதுநாள் வரை இதனைக் கண்டு அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த தேவர்களுக்கு பயம் என்பதே அழிந்துவிட்டது. தேவலோகம் பிழைத்தது.
தேவர்கள் பயம் விலகவும், தேவேந்திர லோகம் பிழைப்பதற்கும் காரணமானது ஒரு ஓசை அந்த ஓசை முருகப்பெருமானின் திருவரையின் மணிகளிலிருந்து வரும் ஓசை! பாடலைப் பார்ப்போம்.

ஒருவரைப் பங்கிலுடையான் குமரனுடைய மணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை படத் திடுக்கிடரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டு வெற்புங் கணகப்
பருவரைக் குன்றுமதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே
(13 கந்தலங்காரம்)

பாடி மகிழ்வீர்!

இதுபோல் மேருகிரி குலுங்கியதாக பாம்பன் சுவாமிகள் குமரகுருதாசசுவாமிகள் பாடலில் (முதன் மண்டலம்) திருப்பழனி பதிகத்தில் முதற்பாடலில் குறிப்பிடுகிறார்.
ஆழி சுலவும் புவியெலா மொளி செய் விண்ணின்
அணையமணி முடியிலங்க
அகலுள் வரையைச் சடாலென்ன மோதிடற்
கானமொய்ம் பணி துலங்க
நாழியொ ரரைக் குணிசி சரருயிர் முருக்குமொரு
நலிவில் வடிவேல் விளங்க
நடுவற்ற வீனப் பிசாசுகள் பிரேதங்
னடைவிட் டுளங்கலங்க
வேழிமிவ ரிந்திராதி திசைநாதர் தவநாதர்
வெருவுற்று னடிவணங்க
விண்டலமு மண்டலமு மசைவுற்று நிலைபிசகி
மேருகிரியும் குலுங்க
ஊழி முடி வெனநவிர மேறு முதல் வாவென்ற
னூறு கெட வென்று வருவாய்
உலகனைத்தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே!

இருபெரும் ஞானிகளாம் அருணகிரிநாத சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் பாடல்களை பயில்வோம், பிறவிப் பயனாம் பிறவாமை என தேர்ச்சி பெறுவோம்.

- வீ கலைச்செல்வன்.

பாம்பனார் காட்டிய அருள்நெறி

தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பார்கள், தோத்திரத்தையும் சாத்திரத்தையும் தம்பாடல்களில் ஒரு சேர அருளிசெய்தவர் பாம்பன் சுவாமிகள், திருமுறைப் பாடல்களை கற்றவர்கள் நம் பாம்பன் சுவாமிகளின் பாடலை பார்த்து இது ‘‘திருமாமுறையோ என வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது நம் சுவாமிகளின் 6666 பாடல்கள், திருமுறையை அருளி செய்த ஞானியர்களை சைவ சித்தாந்த நெறியாளர்கள் அவர்களை கயிலாய பரம்பரையை சார்ந்தவர்கள் என சொல்லுவார்கள்.

திருமூலர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகியோரின் சரிதங்களை ஆராயும்பொழுது அவர்கள் இப்புவியில் வருகைக்கு முன் எப்படி இருந்தார்கள் என சில குறிப்புகள் உண்டு சுத்தவெளி எனும் சிதாகாச பரவெளியில் உள்ள இறைவன் இவ்வுலக இயக்கத்துக்காக உய்வு பெறுவதற்காக அருவநிலையில் இருந்து அரு உருவமாகவும், பின்னர் உருவமாகவும் வந்து பூமியில் தன் பராக்கிரமங்களை உயிர்கள் உய்யும் பொருட்டு தன்னை வெளிப்படுத்தியது.

அந்த இறை தன்மையை சாதாரணமான நம்மை போன்றவர்கள் உணர முடியாமல் வாழ்வில் துன்பங்களும் துயரங்களும் கொண்டு இதுவே வாழ்வு என வாழ்கின்ற போது நித்திய ஆனந்தமே வடிவமான இறைவனின் பல்வேறு வடிவ பேதங்களை உலகிற்று உணர்த்த கூடவே நமது குருமார்களான ஞானியர்களும் தோன்றி நம்மை வழி நடத்தினர்.

அந்த ஞானியர்களின் வரலாற்று குறிப்பில் முன்னிருந்த நிலைகளை எப்படி நாம் அறிந்து கொண்டோமோ, அதுபோலவே பாம்பன் சுவாமிகள் தாம் அருளிய திருச்செந்தில் பதிகம் முதல் மண்டலத்தில் மூன்றாவது பதிகத்தில் தாம் முன்னர் இருந்த நிலைமை பற்றிய குறிப்பை வெகு சூட்சமமாக அறிவித்துள்ளார் அப்பாடலை காண்போம்.

“காலனை உதைத்து விதி முடி கொய்து மலர் எய்த
காம ராசனை எரித்துக்
கலைமதியொடு அரி அண்டர் எவரையும் வெகுண்டமுக்
கண்ணன் ஒரு பாதி என்னும்
மூலகாரணி சருவவேலாக ரட்சகி துழாய்
முடி மகா விஷ்ணு பகினி
முக்கோண சக்கரி சடக்கரி பருப்பதி
முகைப் பயசு அருந்தி மகிழும்
சீலமே அண்டநிரை வைக்கின்ற பரவெளித்
திட்பமும் விரிந்து சூழும்
சித்த வெளி தன்னிலே நான் உள்ள நிலைமையும்
தெற்றென உணர்ந்து அதீதம்
ஏலவே எய்தாத தாழ்வால் உதித்த எற்கு
இனி வரா நெறியை அருளாய்
இஞ்சிவளை மந்த்ரமலி செந்திலில் அமர்ந்த எழில்
எந்தையே கந்த சிவமே

ஆக இப்பாடலில் இவ்வுலகில் ஓர் காரிய நிமித்தம் நம் சுவாமிகள் அப்பரம் பொருள் இருக்கின்ற இடத்தில் இருந்தே வந்தவர் எனும் செய்தியை,

‘திட்பமும் விரிந்து சூழும் சித்தவெளி தன்னிலே நான் உள்ள நிலைமையும் தெற்றென உணர்ந்து அதீதம் ஏலவே எய்தாத தாழ்வால் உதித்தற்கு இனி வரா நெறியை அருளாய்’ என்கிற வரிகளுக்கு வரிசையாக உள்ள பேரண்டங்களை தாங்கி நிற்க்கும். சீதாகச பரவெளியில் உறைகின்ற இறைவனின் தன்மையும் அங்கு நானிருந்த நிலையை ஏதோ உணராத தாழ்வினால் இந்த பிறப்பில் இங்கு வந்தேன் இனி இந்த பிறப்பு இல்லாத நெறியை அருள்வாய் என சுவாமிகள் கூறும் இவ்வரிகள் மூலம் அவர் பிறப்புக்கு முன் உள்ள நிலையை நாம் உணர முடிகிறது.

ஒவ்வொரு மனித வாழ்வின் இலக்கும் இதுதான் என சுந்தரின் பாடல் ஒன்று தெளிவுபடுத்தும் ‘திருவும் மெய்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள் என்றெண்ணி’’ எனும் வரிகள்தான் அவரின் தன்மையும் அவர் அருளிய பாக்களும் நம் பாவங்களை அகற்றவல்லது. பாவங்களை போக்க பல சாதனங்கள் உள்ளன அவற்றில் ஒன்று தவம் தவத்தின் மூலம் பாவத்தை அகற்றலாம் தவம் மூன்று வகைப்படும். அவை மனம், மொழி, மெய் ஆகியவை மூலம் இறைவனை ஆராதித்தல், இச்செயல் சுவாமிகள் அருளிய பாடல்கள் மூலமாக வெகு சுலபமாக நாம் செய்ய முடியும்.

அருள் நெறியில் என் வாழ்க்கை செலுத்த வேண்டும் இதை விஷயத்தை சற்று தெளிவாக காண்போம், இந்த ஸ்தூல சரீரம் கொண்டு நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் நமது பூர்வ கர்மங்களால் நிர்ணயிக்கபடுகின்றன. நாம் எண்ணி எண்ணங்கள் நாம் செய்த வெவ்வேறு செயல்கள் அனைத்தினுடைய மொத்தபலன்தான் இப்பொழுது நாம் பெற்று விளங்கும் ஸ்தூல சூக்கும சரீரங்களின் அடிப்படை.

இந்த ஜன்மத்தில் நாம் என்னும் எண்ணங்கள் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் இனி எதிர்காலத்தில் நாம் பெறவிருக்கும் வாழ்க்கையை உருவாக்குகின்றன எனவே பாவ செயல்களில் வாழ்க்கையை பாழடித்தால் எதிர்காலம் இருண்டதாக அமைந்துவிடும் எல்லோரும் இறைவனிடம் இரண்டற கலப்பதே மனித வாழ்வின் குறிக்கோள் அதற்கு முன்னர் வாழும் காலத்தில் நலமுடன் வாழ வேண்டும் அதற்கு சுவாமிகள்

‘‘நான் பாடும் பாட்டை நவில் பவர்க்கு நாம் நல்காய்’’ என்கிற கூடற்றின்படி பாம்பனார் பதிகங்களை பாடும் அடியவர்க்கு என்றும் நலமே கிட்டும் என்றும் பாம்பனார் கண்ட அருள் நெறியில்

பாம்பன் அருட்செல்வர்
அரிமா. எம்.பாஸ்கர்
காஞ்சிபுரம்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 88வது குருபூஜை விழா

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 88வது குருபூஜை விழா வேலூர் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோட்டை ஆலயத்தில் கடந்த 28-5-2017 ஞாயிற்றுக்கிழமை அன்று வெகு வரிசையாக நடைபெற்றது விழாவினை பாலமதி சித்தர் பாலமதி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ராமகிருள்ணசாது தலைமையேற்றும், கலவை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் முன்னிலை வகித்தும் தொடங்கி வைத்தார்கள். காலை 9 மணிமுதலே அடியார்களும், பக்தகோடிகளும் பெருந்திரளாக வந்து விழாவினை சிறப்பித்தனர்.

அரிமா ஏ.கே.எஸ். சரவணன் வரவேற்புரை நல்க, அரிமா ஜோதிவினாயகம் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார். அரிமா கவிப்போராளி எம்.கண்ணன் சிறப்புரை நல்க காஞ்சிபுரம் அரிமா எம்.பாஸ்கரன் குருபூஜை குறித்த விளக்கம் அளித்தார். பாம்பன் சுவாமிகள் ஆசிரியர் குகஸ்ரீ வீ.கலைச்செல்வன் அவர்கள் அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும் என்கிற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

நிறைவாக அரிமா ஸ்ரீனிவாசன் அவர்கள் நன்றியுரையுடன் 12.30 மணியளவில் அறுசுவை அன்னதானம் நடைபெற்றது விழாவினை பாம்பன் சுவாமிகள் மாத இதழும், ஆதவன் அரும்பாக்க அரிமா நண்பர்களும் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். வேலூர் மஹா தேஜோ மண்டல சபையினர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து சிறப்படைய செய்தனர்.

- செய்தி C.மகேஷ் கொழுமணிவாசகம்

பாம்பனார் பைந்தமிழரசு பெற்ற விருதுகள்

குமரகுருநாதர் பிரபந்தங்கள்		பாம்பன் சுவாமிகள் அமைப்பின் சார்பாக
'இலக்கணக் கடல்'	-	கவிராஜ பண்டித ஜகவீர பாண்டியன்
'சங்க இலக்கியத்தென்றல்'	-	நாவலர் சோமகந்து பாரதியார்
'சைவ சித்தாந்த ஞானசரபம்'	-	மகாவித்வான் மே.வீ.வேணுகோபால் பிள்ளை
'கலியுக வியாசன்'	-	வாகீச கலாநீதி
'மகாபாரத சிங்கம்'	-	கி.வா. ஜகத்நாதன்
'ஜோதிடக் களஞ்சியம்'	-	'உங்கள் எதிர்காலம்' ஆசிரியர்
'ஜோதிடரத்னாகரம்'	-	நாக.இராஜகோபாலன் பி.ஏ., பி.எல்

உணவே மந்திரம்!

முலாம் பழம் சாப்பிடுவதால் உண்டாகும் நன்மைகள்!!!

முலாம் பழத்தில் 95% நீர்ச்சத்தும், பலவிதமான வைட்டமின்களும், நார்ச்சத்தும் நிறைந்துள்ளதால், இது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. அதுமட்டுமின்றி இதில் நீர்ச்சத்து அதிகம் உள்ளதால், இவை உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதில் சிறந்த பழமாகவும் உள்ளது. மேலும் அவை நெஞ்செரிச்சலைக் குறைக்கவும், சிறுநீரகத்தைச் சுத்தப்படுத்தவும் உதவுகின்றன.

முலாம் பழத்தில் சர்க்கரையின் அளவும், கலோரியும் குறைவு. அதனால், உடல் எடையைக் குறைத்து அழகான உடலமைப்பு பெற விரும்புகிறவர்களுக்கு ஏற்ற பழமாகவும் இருக்கிறது. ஏனெனில் இந்த பழத்தில் வைட்டமின் சி என்னும் ஆன்டிஆக்ஸிடன்ட் அதிகம் நிறைந்தது. இதனால், இதயம் தொடர்பான நோய்களையும், புற்றுநோயையும் தடுக்க ஏற்றதாகவும் உள்ளது. இப்போது இந்த பழத்தில் வேறு என்ன நன்மைகள் எல்லாம் நிறைந்துள்ளது என்று கொடுத்துள்ளோம். அதைப் படித்து தெரிந்து கொண்டு, அதிகம் சாப்பிடுங்கள்.

பாம்பன் சுவாமிகள் அருள்நெறி அறக்கட்டளை
ஷெனாய் நகர், சென்னை
முப்பெரும் குருபூஜை விழா



நாள்: 23/7/2017, மாலை: 5.00

இடம்: ஐ.சி.எப் கமல விநாயகர் சத் சங்கம் – மண்டபம்

உரை

அருணகிரிநாதர் திருப்புகழமுதன் வலையப்பேட்டை, ரா.கிருஷ்ணன் அவர்கள்

சேக்கிழார் திருமுறைச் செம்மணி ஜே.மகாதேவன்

பாம்பன் சுவாமிகள் திருப்புகழ்ச்செம்மல் பாம்பனடிமை வீ.முத்துக்குமார குருசாமி (சத்குரு)

இப்படிக்கு

வி. ரவிச்சந்திரன்

கருமாரி தாசருக்கு சென்னையில் அஞ்சலி!

பாம்பனார் பைந்தமிழரசு கருமாரி தாச சுவாமிகள் 5/6/2017 அன்று பாம்பன் சுவாமிகள் திருவடியடைந்து தம்பிக்கலை ஐயன் திருக்கோயிலில் திருச்சமாதி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 17/6/2017 அன்று சென்னை தேவர் மண்டபத்தில் மாலை 6 மணியளவில் ஆன்றோர் சான்றோர்கள் சேர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது. ஓவியப்பாவலர் மு.வலவன் கவிப்பேரொளி. கண்ணன், வெற்றிவேல் ஆட்டோமொபைல்ஸ் கவித்.திலகம் தாமோதரன், கவி.முரளிகிருஷ்ணன் போன்றோர் கவிதாஞ்சலி செய்து, மலரிட்டு கருமாரிதாச சுவாமிகளை வணங்கினர்.

தொடர்ந்து Asst director Hand loom ராஜசேகரன், புலவர்.ஆ.வை.மணியன், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் பி.ஆர்.ஒ, திரு.என்.ஆர். ஹரிக்குமார், முன்னூர் கே.ரமேஷ், ராமநாதபுரம் பழனிவேல், வாரியர் சீடர் வெற்றிவேல் இராஜேந்திரன், டி.கே.எஸ் ஏகாம்பரம் தேவர் ஆலயம் முத்துபாரதி, தஞ்சை தமிழ்ப்பித்தன் திருவேற்காடு பெரியசாமி, நாகப்பட்டினம் சாய்பாத மெய்யடிமை சுவாமிகள், சிவக்குமார்-ஆத்ம தரிசன சேவா சங்கம், வேலூர் பாலமதி சித்தர் இராமகிருஷ்ண சாது மற்றும் அவரது குழுவினர் கலந்து கொண்டனர். திரளாக உறவினர்களும் நண்பர்களும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீகலாபீடம் பாரி, பாம்பன் அறக்கட்டளை வீ.ரவிச்சந்திரன், காஞ்சி அரிமா.பாஸ்கர் வேலூர் மகாதேஜோ மண்டல அன்பர்கள் திருவான்மியூர் பாம்பன் சுவாமி அடியார்கள் கொழுமணிவாக்கம் சிவத்திரு.சி.மகேஷ், பிஎஸ்என்எல் இன்ஜினியர், முன்னூர்.வேணுகோபால் போன்றோர் வருகை தந்தனர்.

விழா நிகழ்ச்சியை சத்குரு அவர்கள் தொடங்கி வைக்க சாந்தி ஞானசேகர் இறை வணக்கம் பாடினார். விழா நிகழ்ச்சியை சித்ரகுப்தன் வீ.ராமதாஸ் தொகுத்து வழங்கினார்.

ஒரு முக்கிய அறிவிப்பு

1. எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளை தட்டச்சு செய்து அனுப்பவும்.

2. பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் அனுப்பவும்.

3. பாடல்கள் தெளிவான முறையில் சொல் சிதைவு இல்லாமல் எழுதி அனுப்பவும்.

4. திருமுறை, திருப்புகழ் மற்றும் பாம்பன் சுவாமிகள் பாடல்களை பரப்பும் மைய கருத்து கொண்ட கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

5. அனைத்து படைப்புகளும் ஆங்கில மாதம் 12 தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

-ஆசிரியர்

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

1. தெளிவான பெயர் முகவரி எழுதி அனுப்புங்கள்.

2. தங்களது தொலைபேசி செல்பேசி, மின்னஞ்சல் போன்றவற்றை தெளிவாக எழுதி அனுப்பவும்.

3. செல்பேசி - வாட்ஸ் அப் உள்ள எண்ணை அனுப்பிடுதல் நலம்.

4. புத்தகம் வரவில்லையென்றால் உடனடியாக எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

5. தெரிந்த அன்பர்களை சந்தாதாரர்களாக்கி எங்களுக்கு உதவுங்கள்.

-ஆசிரியர்

பழநித் திருப்புகழ் முற்றோதுதல்

அடியார் பெருமக்களுக்கு வணக்கம்! "அருணை முனிவன் திருப்புகழ் மையம்" நடத்தும் பழநி திருப்புகழ் முற்றோதுல் 4.6.2017 ஞாயிறன்று காலை 8.30 மணி அளவில் திருவாளர் வீ.கலைச்செல்வன் அவர்கள் ஆசிரியர், பாம்பன் சுவாமிகள் மாத இதழ், அவர்கள் தலைமையில், சேவாபாபரதி தாம்பரம் வட்டம், திருமிகு சங்கர்.ஜி அவர்கள் முன்னிலையில் தாம்பரம் சாண்டோரியத்தில் அ/மி வலம்புரி பாபல விநாயகர் ஆலயத்தில் நடந்தேறியது.

அவ்வமையம் திருவாளர் வீ.கலைச்செலவ்ன ஐயா அவர்களின் சொற்பொழிவு வெகு சிறப்பாக இருந்தது. பிரதி மாதம் முதல் ஞாயிறன்று நடக்கும் பழநி திருப்புகழ் முற்றோதுதலில் திரு.வீ.கலைச்செல்வன் ஐயாவினுடைய சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு மணிமகுடமாகத் திகழும் ஒவ்வொரு மாதமும் முருகனைப் பற்றியும் அருணை முனிவனைப் பற்றியும் புதுப்புது கருத்துக்களைச் சொல்வதில் இவருக்கு நிகர் இவரே எனலாம்.

தான் கோவணாண்டியாய் இருந்தாலும் தன்னை அண்டிவரும் பக்தர்களை அரசனாக உயர்த்தும் வல்லமை பெற்றவன் தண்டாயுதபாணி என்றும், இராஜ அலங்காரத்தில் எம்பெருமானை தரிசனம் செய்வதைவிட கோவணாண்டியாய் தரிசிப்பதுதான் சிறந்தது என்றும், அதற்கான காரணத்தினையும் விளக்கிய விதம் அருமையிலும் அருமை. கையிலே தண்டத்துடன் காட்சி அளிக்கும் தண்டபாணியை மொட்டை தலையோடுதான் நாம் பார்க்கிறோம்.

ஆனால் தண்டாயுதபாணி மொட்டை தலை அல்ல. பின்புறம் குடுமி உள்ளது என பாம்பன் சுவாமிகள் வழி நின்று கூறிய விதம் அருமையிலும் அருமை.பழநிக்கு ஏன் செல்ல வேண்டும். பழநி திருப்புகழை ஏன் ஓத வேண்டும், ஓதினால் என்ன பயன், முற்றோதுதல் இல்லங்களில் செய்வதின் பயன், பலன் என்ன? என்பன பற்றியெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறிய விதம் அற்புதம்.

கோவிலுக்குச் சென்றால் ஐயர் தட்டில் கட்டாயம் காசு (தட்சணை) போட வேண்டும் என்றும், ஏன் போட வேண்டும் என்றும் விளக்கிய விதம் இவரைத் தவிர வேறு எவராலும் இயலுமோ அறியேன். ஆக மொத்தத்தில் சேவாபாபரதி தாம்பரம் சாண்டோரியத்தில் சார்பாக நடந்த முற்றோதுதலில் இவரது பேச்சு மிகவும் ரசனையோடும், கேட்பாரது உள்ளங்களை ஈர்க்கும் விதமாகவும் அமைந்தது.

பழநி திருப்புகழ் முற்றோதுதல் திரு.கோ.ஆறுமுகம் அவர்களின் வழி நடத்துதலில் வெகு சிறப்பாக ஒதி முடித்து, அன்னதானத்தோடு இனிதே முடிந்து, அடியார் பெருமக்கள் மனநிறைவோடு சென்றார்கள். எல்லாம் எம்பெருமான் செயல்.

– கண்டராதித்தன்

SRI JANANI CATERING SERVICE

M.S. HAREESH, B.SC.,
98407 03703

New No 1 Old No 36
Alagiri Nagar, Main Road,
Vadapalani,
Chennai 600026



"Nalabhagam"
R. MEENAKSHI SUNDARAM
Catering Contractor
98405 91662

A TO Z
MARRIAGE
CONTRACTOR

குமரகுருதாசர் பிரார்த்தனை மையம்

பிறருக்காக பிரார்த்தனை செய்யும் போது உடனே பலிதமாகும். அதனால்தான் மற்றவர் இன்னல் உறும் போதும் அருகே சென்று ஆவன செய்வர் நமது முன்னோர். சென்ற மாத பிரார்த்தனை மைய அறிவிப்பை தொடர்ந்து பல தொலைபேசி அழைப்புகள் கடிதங்கள் என்று அதிகமான பக்தர்கள் நம்மை தொடர்பு கொண்டனர். குறை தீர்க்கும் கோமான் குமார பரமேஸ்வரனிடத்திலும். குமரகுருதாசர் திருவடித் தாமரையிலும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. சில பிரார்த்தனைகள் உடனே பலனை அளித்தன.

தொலைபேசி அழைப்புகளை தவிர்த்து கடிதம் மூலம் பிரார்த்தனைகளை அனுப்புவது உடனுக்குடன் பட்டியலில் சேர்க்க துணை புரியும் எனவே அன்பர்கள் தங்களது பிரார்த்தனைகளை கடிதம் மூலம் எங்களுக்கு அனுப்பிட வேண்டுகிறோம். உங்களது பிரார்த்தனைகள் ரகசியமான இறைவனிடம் மட்டுமே வெளியிடப்படும். உங்கள் குறைகள் தீர தொடர்பு கொள்க!

குமரகுருதாசர் பிரார்த்தனை மையம்
குமரகுரு பதிப்பகம் 5ஏ, நான்காவது குறுக்குத் தெரு,
சி.ஐ.டி நகர் கிழக்கு, சென்னை-35 Email: kalaisve@gmail.com

நிறுவனர்:
திருமதி. பி.எஸ்.சித்ரா
முதன்மை ஆலோசகர்
பாம்பனார் பைந்தமிழரசு ஸ்ரீலஸ்ரீ கருமாரி தாசர்
சிறப்பு ஆலோசகர்கள்
பாலமதிச்சித்தர்
சிவனடிமை ஸ்ரீலஸ்ரீ இராமகிருஷ்ணசாது
கந்தரனுபூதி செல்வர் திருமிகு.புருஷோத்தமன்
பொதுஜனத்தொடர்பு மேலாளர்
சிவத்திரு.புலவர்.இராசண்முகம்
ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்
ஆன்மீகச்சுடர்.குகஸ்ரீ Er. வீ.கலைச்செல்வன்
குமரகுரு பதிப்பகம், 5ஏ, நான்காவது குறுக்குத்தெரு,
சி.ஐ.டி.நகர் கிழக்கு, சென்னை 600 035
தொலைபேசி: 044-24338591, 044-24327544
மின்அஞ்சல்:
editor@pambanswamigal.com
advt@pambanswamigal.com
இணையதளம்:www.pambanswamigal.com

Pamban Swamigal
Monthly Magazine

Single Copy	- Rs. 10/-
Annual Subscription	- Rs.120/-
2 year Subscription	- Rs.240/-
10 Year Subscription	- Rs. 1250/-
Foreign	
Annual Subscription	- Rs.1000/-
2 year Subscription	- Rs.2000/-
5 Year Subscription	- Rs. 5000/-

Owned & Published by: V.Kalaichelvan, from 5A, 4th cross street, C.I.T Nagar East, Chennai 35, and printed by him at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellies Road, Chennai-2.

வேலூர் கோட்டையில் நடைபெற்ற பாம்பன் சுவாமிகள் குருபூஜை விழா காட்சிகள்

Publication 28th of Every Month Pamban Swamigal Tamil & English Monthly, RNI No. TNBIL/21686/2006 Postal Registration No: TN/CC (S) DN/293 15-17, Posted at PATRIKA CHANNEL, EGMORE, CHENNAI - 8, RDIS No: 446/13

பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின்
குருவருளை நாடி பணியும்....

தி.நகர் காதிபவனின்

காதி
டரு வேல்யூ ஸ்டோர்

இயற்கை அங்காடி

ஆர்கானிக் ● சித்தா ● கதர் ● கைத்தறி

20, தண்டபாணி தெரு, (மோதிலால் தெரு கார்னர்)
தி.நகர், சென்னை - 17. போன்: 044-2432 9268
Email: khaditruevalue@gmail.com

Customer Care: 8144 300 400

மரச்செக்கில் ஆட்டிய எண்ணெய் வகைகள்
கைக்குத்தல் அரிசி வகைகள்
சிறுதானிய வகைகள்
பருப்பு வகைகள்
பயிறு வகைகள்
ரெடி மிக்ஸ் வகைகள்
சேமியா வகைகள்
பராம்பரிய இனிப்பு கார வகைகள்
சர்க்கரை வகைகள்
பனை பொருட்கள்
அவல் வகைகள்
Dry Fruits
சர்பத் வகைகள்
நாட்டு மாட்டு பால் வெண்ணெய்
ஊத்துக்குளி
சுத்தமான தேன்

ஹெர்பல் டீ
மூலிகை பொடிகள்
ஹெர்பல் சோப்
ஹெர்பல் காஸ்மெடிக்ஸ்
ஹெர்பல் ஷாம்பு
நாட்டு, மாட்டு நெய்
வத்தல், வடகம் வகைகள்
ஊறுகாய் வகைகள்
பூஜை பொருட்கள்
இன்னும் பல இயற்கை சார்ந்த தயாரிப்புகள்

Go Farm to home Green

Sri Venkateswara Carbonic Gases Pvt Ltd
SVCGPL

oxygen
Carbon-di-oxide
Dry Ice
Nitrogen
Dissolved Acetylene
Nitrous Oxide
Ammonia
MIxture Gases
Special Gases
Fire Extinguisher
Cylinders
Cylinder Accessories
Liquid Nitrogen Container
Helium
Argon
Medical Oxygen
Industrial Oxygen

Contact US:
Sri Venkateswara Carbonic Gases (P) Ltd.
Corporate Office
9/84, Lajaparthirai Street, Srinivasapuram, Coimbatore-64100
Tamilnadu, India.
Tel : +91 422 2230846 / 2237530 / 2236692 / 2693499 / 2692799 / 2693799 / 2698799 Fax : +91 422 2696399
Mobile No: 91 9443311888, 9443130846, 9677730846, 9842211535, 9443311885

www.solidco2.net
Email : ramaswathi@vsnl.net, svegpl_cbe@vsnl.net